பொங்கல் ரிலீஸ்
மாடர்ன் தியேட்டர்ஸ்
முழுநீள கலர் படம்
அலிபாபாவும்
40 திருடர்களும்
டைரக்ஷன்: T. R. சுந்தரம் B.A.B.S.
BHARAT STUDIO

266
1-56
2611

இலவசம்!

ஹேர் ஆயில் நெ. 501 நரை மயிர் கருக்கவும், ரோமம் உதிர்வதைத் தடுக்கவும் உதவுகிறது.

ஒரு புட்டி விலை ரூ. 1-15-0

3 புட்டிகள் விலை ரூ. 5-0-0

எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் எங்கள் கம்பெனி ஹேர் ஆயிலை உபயோகிப்பவர்களுக்கு அழகான கைக்கெடிகாரம் ஒன்றும் நியூ கோல்ட் மோதிரமும் இனாமாகத் தருகிறோம். 15 வருஷ உத்திரவாதம். ஒரே சமயத்தில் மூன்று புட்டிகள் வாங்குபவர்களுக்கு 6 கைக்கடிகாரங்களும் 6 மோதிரங்களும் இலவசமாகத் தருகிறோம். திருப்திகரமாயிராவிடில் பணம் திரும்பப் பெறலாம்.

AMRIT PHARMACY
(P. P. M.) NAKODAR

15 ஜுவல் ரிஸ்ட் வாட்சு ரூ. 5/-

15 ஜுவல் ரிஸ்ட் வாட்சு ரூ. 5/-க்கு இத்துடன் ஒரு பௌண்டன் பேனாவும் இலவசம்.

SWISS WATCH SUPPLIERS
P. B. 1392 (PPM) DELHI.

ரூ. 500 இனாம்! இந்த சக்தி வாய்ந்த ஸ்பெஷல் மோதிரத்தை அணிவதால் காதல், வியாஜ்யம், பரீக்ஷை, வியாபாரம் உத்யோக உயர்வு, மக்கள் பேறு இவைகளைப் பெறலாம். ரூ. 1/15/- சக்தியற்றது என்று நிரூபித்தால் ரூ. 500 பரிசு!

MAHAMUNI JOTISH ASHRAM (PPM)
SHAHDARA - DELHI.

96"x54" காஷ்மீரி சால்வை ரூ. 2/-

GENERAL SUPPLY CO.,
P. B. 1360 (P.P.M.)

1956-ல் உங்கள் எதிர்காலம்

ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு மலரின் பெயரையும், உங்கள் பெயர் விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள். நாங்கள் உங்களுக்கு ரூ 1-4-0க்கு தனி தபால் செலவுடன் உங்களுக்கு வரும் 12 மாதங்களில் ஏற்படும் பலன்களையும் வியாபாரத்தில் லாப நஷ்டம், பதவி உயர்வு, உத்தியோக மாற்றம், குழந்தைப்பேறு, சந்துஷ்டி மற்றும் தேக அசௌகரியங்களையும் அவைகளினின்றும் பாதுகாக்கும் குறிப்புகளையும் அனுப்புகிறோம்.

SHREE SWAMI SATNARAIN JOTISH ASHRAM.
(P P M.) Hoshiarpur (Pb).

காஷ்மீர் சால்வை ரூ. 2½ தான்!

96"×54" அளவுள்ளதும், கலர் போகாததுமான காஷ்மீர் சால்வை ரூ. 2-8-0 தபால் செலவு தனி. சொல்ப சால்வைகளே உள்ளன. ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் ஆங்கில விலாசத்துடன் உடனே எழுதுக.

KASHMIR SHAWL HOUSE (P.P.M.)
Durgiana, Amritsar

இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை : ஸ்ரீ கிருஷ்ணா,
ஸ்டார், உமா & கபாலி
மற்றும் தென்னாடெங்கும்

ஸ்வராஜ் பிக்சர்ஸ்
அளிக்கும்
என்.ஏ.டி யின்

ஜெயசிம்ஹன்

தமிழ்

டைரக்ஷன்: யோகானந்த்

பூர்ண உரிமையாளர்
வீராசாமி பிக்சர்ஸ்
கோயம்புத்தூர்

அஞ்சலி, என். டி. ராமராவ், ரங்காராவ், ரேலங்கி, வஹிதா, குசலகுமாரி

காலத்திற்கேற்ற கருத்தோவியம்

விநியோகஸ்தர்கள்: சென்னை நகரம், வடதென் ஆற்காடு, செங்கற்பட்டு திருச்சி & தஞ்சை-பெல் பிக்சர்ஸ், சென்னை ★ மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி-ராதா கிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட், ஆலப்புழை ★ கோயமுத்தூர் & நீலகிரி ஆனந்தா பிலிம்ஸ், கோவை ★ சேலம்-சுப்பு & கோ, சென்னை ★ மைசூர் & பெங்களூர்-சுசீலா பிக்சர்ஸ், காந்திநகர், பெங்களூர் ★ மலபார், கொச்சின் & திருவாங்கூர்-ரேமாண்ட் & கோ, எர்ணாகுளம் ★ F. M. S. ஷா பிரதர்ஸ்-சிங்கப்பூர்.

மற்ற விவரங்களுக்கு: மதருஸ் மூவிடோன், சென்னை-4.

வெற்றிகரமாக நடைபெறுகிறது

திங்கள் *****

மாதப் பத்திரிகை

திங்கள் ஒரு புதிய மாதப் பத்திரிகை. பிரதி ஆங்கில மாதம் 15-ம் தேதி யன்று வெளிவரும். முதலிதழ் தைப் பொங்கலன்று வெளிவருகிறது.

திங்கள் தனக்கென ஒரு புதிய பாதை வகுத்துக் கொண்டிருக்கிறது. கட்டுரைகள், படங்கள்—கதைகள் கிடையாது. ஏராளமான விஷயங்களைப் பற்றிப் பலதரப்பட்டவர்கள் எழுதும் கட்டுரைகள்—விஷயங்கள் கணக்கிலடங்கா. படக் கட்டுரைகள் ஒரு தனி அம்சம். மறக்கமுடியாத சம்பவம், ஹாஸ்ய சம்பவம்—இவை விசேஷ அம்சங்கள்.

கிரவுன் $\frac{1}{8}$ அளவு

தனிப் பிரதி விலை எட்டு அணா

வருஷ சந்தா ரூபாய் ஆறு

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை – 2

எல்லா 'பேசும் படம்' விற்பனையாளர்களிடமும் 'திங்கள்' கிடைக்கும். உங்கள் பிரதிக்கு முன்பே ஆர்டர் கொடுத்துப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

படம் 14

காட்சி 5

பேசும் படம்

★ ஜனவரி 1956 ★

1.	'பேசும் படம்' பேசுகிறது	... 8
2.	ஸ்டிடுயோ விஜயம	... 12
3.	என. டி. ராமராவ்–பானுமதி (மூவர்ணப் படம்)	... 17
4.	அஷ்டாவதானம் - (பானுமதி)	... 18
5.	வி. எம் ஏழுமலை (வாழ்க்கைச் சித்திரம்)	... 24
6.	1956–எண்ணமும் எதிர்பார்த்தலும்	... 32
7.	'நயா ஆத்மி'யில் அஞ்சலிதேவி	... 35
8.	'ஆசை'யில் ராஜசுலோசனா (மூவர்ணப் படம்)	... 36
9.	'ஆசை'யில் பத்மினி (மூவர்ணப படம்)	... 37
10.	'தெனாலிராம'னில் பானுமதி	... 38
11	'சத்தியம்-சிவம்–சுந்தரம்'	... 39
12.	'பேசும் படம் டைரி'	40
13.	சீனாவில் இந்தியத் திரைப்பட விழா	... 52
14.	என. டி. ராமராவ்–சந்தியா (மூவர்ணப் படம)	... 56
15.	'தெனாலிராமன்' (படக காட்சிகள்)	... 57
16.	'நான்பெற்ற செல்வம்' (படக் காட்சிகள்)	... 61
17.	கேள்வி–பதில்	... 66
18.	தபால் பெட்டி	... 71
19.	நான் ரஸிதத காட்சி	... 76
20.	வெட்டுங்கள் வெட்டுங்கள்	... 79
21.	நல்ல தங்காள (படக் காட்சிகள்)	... 81
22.	கோகிலவாணி (படக் காட்சிகள்)	.. 85
23.	எஸ். ஸி. கிருஷ்ணன் (பின்னணிக் குயில்)	.. 89
24.	வேட்டை நக்ஷத்திரங்கள்	. 92
25.	குணசுந்தரி (திரைக்கதை. வசனம்)	... 98

PESUM PADAM, Tamil Monthly Magazine Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras - 2. (PHONE 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T.V. Ramanath Sole Agents for Ceylon: Mohan & Co. Ltd., 74, Dam Street, Colombo and Grand Bazaar, Jaffna. Sole Agent for Malaya P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur; 8, China Street. Penang and 3, Kerbau Road, Singapore.

Editorial & Publication Offices:

17, General Patters Road, Madras - 2.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

'பேசும் படம்' பேசுகிறது

தலை சிறந்த பிரஜைகள்

நவம்பர் மாதம் 28-ம் தேதி சென்னை நகரமே திரண்ட குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. தெருவெங்கும் தோரணங்களாலும் வீடு தோறும் கொடிகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நகர வீதிகளிலெல்லாம் மக்கள் மண்டிக் குழுமிக் கூடினர்.

சென்னை ஒரு சுதேச ராஜ்யமாக இருந்து, சென்னைக்கு ஒரு மன்னரும் இருந்து, அந்த சென்னை ராஜ்ய மகாராஜாவுக்கு ஒரு முடி சூட்டு விழாவோ. அல்லது இளவரசியின் திருமணமோ, இளவரசர் பட்டாபிஷேகமோ இப்படி ஏதாவது நடக்குமானால் ராஜபக்தி மிகுந்த பிரஜைகள் எப்படி நடந்து கொண்டிருப்பார்களோ அப்படிக் காட்சியளித்தது சென்னை. (ஆனால் நல்லவேளையாக அப்படியெல்லாம் இங்கே இப்போது முடியாட்சி ஒன்றுமில்லை!)

நமக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத, அறிமுகமோ, பரிச்சயமோ இல்லாத ஒரு வெளிநாட்டிலிருந்து அதன் தலைவர்கள் இருவர் இங்கு விஜயம் செய்திருந்தனர். ரஷ்யப் பிரதமர் புல்கானினும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி குருஷ்சேவும் விஜயம் செய்ததைத்தான் குறிப்பிடுகின்றோம். அவ்விரு தலைவர்கள் மீதும் நமக்கென்ன அத்தனை அக்கறையும், வாஞ்சையும், மதிப்பும்?

அதெல்லாம் ஒன்றும் இல்லை. நமது குடியரசின் ஒப்பற்ற தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு ரஷ்யாவுக்கு விஜயம் செய்தபோது அவருக்கு ரஷ்யத் தலைவர்களும் பெருமக்களும் அளித்த வரவேற்புக்கு நமது மனப்பூர்வமான நன்றியைத்தான் இப்போது இப்படி வெளியிட்டோம். நமது தலைவர்களின் மீது நமக்குள்ள நன்மதிப்பைத்தான் தெளிவுபடுத்தினோம். குறிப்பாக நமது மாபெரும் தேச பக்தியைத்தான் நாம் பறைசாற்றினோம். ரஷ்யத் தலைவர்களும், அவர்கள் மூலம் ரஷ்ய மக்களும் நமது மனதை அறியும்படிச் செய்தோம். இதுதான் நமது சுதந்திர ஆசை; தேச பக்தி; சமாதான ஆர்வம்.

ஆமாம்! இப்படி தேசபக்தி மிகுந்த சுதந்திரப் பிரஜைகள் சாமான்ய மனிதர்கள்தானே. சினிமாக்காரர்களோ, கேவலம் கூத்தாடிகளோ இல்லையே! ஏனென்றால் சினிமாக்காரர்களுக்கு—குறிப்பாக நடிக நடிகையருக்கு— அதாவது கலைஞர்களுக்கு, இப்படிப்பட்ட தேசபக்தியும் பிரஜா உணர்ச்சியும் இருக்காதே!

இப்படித்தான் சாதாரணமாக நமது சர்க்காரும் பெரிய பிரமுகர்களும் கருதி இருக்கிறார்கள் இன்று வரை!

ஆனால் ரஷ்யத் தலைவர்களை வரவேற்ற லக்ஷோப லக்ஷம் பிரஜைகளிலே நூற்றுக் கணக்கான கலைஞர்கள் முன்னணியில் நின்றனர்; இன்னல்கள் பட்டனர்.

இது ஓர் அரசியல் தொண்டு; தேச பக்தியுள்ள பிரஜையின் கடமை என்பதை நக்ஷத்திரங்களும் கலைஞர்களும் நிரூபித்தனர்.

சமீப மாதங்களில் தமிழ் நாட்டில் பெரும் புயலடித்துப் பல உயிர்களையும் கோடிக் கணக்கான ரூபாய்களையும் பாழடித்தது. பிரதமர் காமராஜர் மற்றும் மந்திரிகளும் தலைவர்களும் பறந்து சென்று துன்புற்ற உயிர்களுக்குத் துணை செய்யத் தொடங்கினர்.

"கேவலம்" கலைஞர்கள்தானே என்று நினைத்தார்களே அந்த பிரஜா மணிகள் திரண்டெழுந்து தோள் தட்டினர், துன்பத்தைத் துடைப்போம் என்று. ஒன்றுகூடி, ஆடிப்பாடி நிதி திரட்டினர். தங்களுக்கென்று கையேந்தி யறியாத செல்வமணிகள் வட்டிலேந்திப் பிச்சை கேட்டனர் பொது மக்களிடம். நூறு, ஆயிரம், பதினாயிரம் என்று பெருக ஆரம்பித்தது கலைஞர்களின் புயல் கஷ்ட நிவாரண நிதி.

ஒவ்வொரு கலைஞரும் எத்தனையோ வேலைகளை விட்டது விட்டபடி, தேசத் தொண்டிலே குதித்துவிட்டனர். நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு நிதிக்கு நன்கொடைகளை, சுயமாகச் சம்பாதித்த பணத்திலிருந்து, வாரி, வாரி வழங்கினர்; வழங்குகின்றனர்! ஆஹா; இதுவன்றோ தேசபக்தி! இதுவன்றோ பிரஜா சேவை! சமூக சீர்திருத்த வாதிகள் என்றும், தேசத்தொண்டர்கள் என்றும், தேசத் தலைவர்கள் என்றும் கூறிக்கொள்ளும் பெரிய மனிதர்களையும், அந்தப் பெரிய மனிதர்களையே நம்பி, அவர்களுக்காகவே சேவை செய்யும் சர்க்காரையும் கேட்கிறோம்; இப்போதாவது கண்கள் திறந்தனவா என்று? சாக்ஷாத் கடவுளின் அவதாரங்களாகத் தம்மை வர்ணித்துக் கொள்ளும் ராஜரிஷிகள், இந்தக் கலைஞர்களை வெறும் வாய் வார்த்தையில் ஆசீர்வதிக்கக்கூடத் தயங்குகிறார்களே, அவர்களுக்கும் இப்போதாவது கண் தெரிகிறதா?

கலைஞர்கள் வெறும் கூத்தாடிகள் அல்ல; ஒதுக்கப்பட வேண்டிய சமூகத்தினர் அல்ல; சுயநலப் பிண்டங்கள் அல்ல என்பதையும் கலைஞர்களும் தாய்நாட்டின் தலை சிறந்த பிரஜைகள் என்பதையும் இனியாவது நமது சர்க்கார் உணருவார்களா? கலைஞர்களின் சமூகத் தொண்டு புதிதல்ல; தங்களுக்குச் சரியென்று பட்டதைத் தங்கள் நாடகங்களில் புகுத்திப் பிரசாரம் செய்வதும் சமூக - தேச சேவைதான். சுதந்திரப் போராட்ட காலத்தில் நவாப் ராஜமாணிக்கம் போன்றோரின் தேசசேவையை மறந்துவிட முடியாது. சென்ற தடவை தமிழ்நாட்டில் புயலடித்த போதுகூட நமது நக்ஷத்திரங்களும் வடஇந்திய நக்ஷத்திரங்களும் 'கிரிக்கெட்' விளையாடி நிதி திரட்டி உதவினார்கள். மற்றும் பல சமயங்களிலும் நாடகங்களினாலும், சினிமாவினாலும், பாடல்களினாலும் தேசசேவை செய்து கொண்டு வந்துள்ளனர் நமது கலைஞர்கள்.

இதையெல்லாம் எதற்காகக் கூறுகிறோமென்றால் பொறுப்பு மிகுந்த நமது ராஜ்ய சர்க்கார், நமது கலைஞர்களை மதிப்பு மிக்க பிரஜைகளாகக் கருதுவதில்லையே என்ற குறைதான். உதாரணம் வேண்டுமா? ஆம்தா! இப்போது ரஷ்ய நாட்டுக் கலைஞர்கள் பலர் நமது நாட்டிற்கு வந்திருக்கின்றனர். அவர்களைக் கொண்டு தென்னிந்தியாவில் புயல் நிவாரண நிதி திரட்டும் அபிப்பிராயத்துடன் 'ரஷ்யக் கலைஞர் கலைவிழா' நடத்த நமது கலைஞர்கள் விரும்பினர். ஆனால் சர்க்காரே இதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் செய்து விட்டனர். பரவாயில்லை; நல்லதுதான். ஆனால் அந்த வரவேற்புக் கமிட்டியிலே, நிகழ்ச்சி அமைப்புக் குழுவிலே, பருந்துக்குக் கூட ஒரு கலைஞர் இல்லையாம்! இதற்கு என்ன சொல்வது? வெளிநாட்டுக் கலைஞர்களை வரவேற்கும் கௌரவம்கூட நமது கலைஞர்களுக்குத் தரக்கூடாது என்று கருதும் சர்க்காரின் மனப்பான்மையை என்னென்று வர்ணிப்பது?

இனியாவது சர்க்கார் மனம் மாறி, நமது கலைஞர்களுக்கு உரிய பிரஜா அந்தஸ்தையும் கௌரவத்தையும் அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

தாங்கள் திரட்டியதில் ஒரு பகுதியான ரூ. 41,000 ஐ நிதி மந்திரியிடம் அளிக்கிறார் கமிட்டியின் தலைவர் என். எஸ். கே.

பாரத பிரதமர் நேருஜியின் ரஷ்ய நல்லெண்ண விஜயத்தைத் தொடர்ந்து ரஷ்யப் பிரதமர் புல்கானினும் கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி குருஷ்சேவும் இந்தியாவிற்கு விஜயம் செய்தார்கள். தேசமெங்கும் அவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

சென்னை நகருக்கு நவம்பர் 28-ம் தேதி ரஷ்யத் தலைவர்கள் விஜயம் செய்தார்கள். அவர்களது விஜயத்தை முன்னிட்டு சென்னை நகரமெங்கும் ஒரே குதூகலம் தாண்டவமாடியது. தோரணங்களும் மின்சார விளக்குகளும் ஜன சமுத்திரமுமாக எங்கும் கோலாகலக் காட்சிகள் தான்.

இந்தக் கோலாகல தினத்தில் அழகுக்கு அழகு செய்வது போல இருந்தது நட்சத்திர வரவேற்பு. ரஷ்யத் தலைவர்களைப் பிரமாதமான முறையில் வரவேற்பதற்காகத் தென்னிந்திய கலைக் கழகங்களின் சார்பில்

ஒரு நட்சத்திரக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. மவுண்ட் ரோட் ரவுண்ட் டாணாவில் ஓர் அலங்காரமான மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதிலே கலையுலகின் சரித்திரத்திலேயே முதன் முறையாகத் தென்னிந்தியக் கலைஞர்களில் பெரும்பாலானவர்கள் ஒன்றுகூடி ரஷ்யத் தலைவர்களை வரவேற்கத் தயாராக இருந்தார்கள்.

தலைவர்களின் கார் அந்த இடத்தருகே வந்தபோது டி. ஏ. மதுரம் புல்கானினுக்கு பொன்னாடை போர்த்தினார். சிவதாணு குருஷ்சேவுக்கு பொன்னாடை போர்த்தினார். பிரபல நடிகைகள் பலர் சமாதானச் சின்னமாக வெள்ளை ஆடையுடுத்தி வெண் புருக்களைப் பறக்கவிட்டனர்.

ரசிகர்களும், ஏன் கலைஞர்களுமே கூட, இதுவரை கண்டிராத கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது இந்த வரவேற்பு விழா.

ஸ்டுடியோ விஜயம்

என்லார்ஜர்

எல்லையின்றிப்பரந்துகிடக்கும் ஆகாயத்தின் நீலவண்ணத்தில் அமைந்திருந்த புத்தம் புதிய 'டாட்ஜ்' கார் அந்தப் பிரம்மாண்டமான பங்களாவின் 'போர்டிகோ'வில் ஒய்யாரமாக வந்து நின்றது.

கார் நின்ற மறுகணம் அதன் பின் கதவு படக்கென்று திறந்து கொண்டது அதிலிருந்து பட்டுச் சொக்காயும், சரிகை அங்கவஸ்திரமும், கச்சை வேஷ்டியும் கட்டிய ஒரு இளம் வாலிபன் இறங்கினான். அவனைத் தொடர்ந்து ஒரு பருவப் பெண் இறங்கி, நாணத்தால் தலை குனிந்தபடி அவன் அருகிலே வந்து நின்று கொண்டாள்.

இதற்குள்ளாக உள்ளேயிருந்து வயதான ஒரு ஸ்திரீ ஆலத்தி கரைத்து எடுத்து வந்தாள்.

'கண்ணின மணிகள்' படத்தை டைரக்டர் ஜானகிராம் சுடுகிறார்.



புதுமுகம் சந்துருக்கு, செயற்கை கண்கள் வைக்கப்படுகின்றன, குருட்டுத் தோற்றத்துக்கு

வந்தவர்கள் தாம்பத்யப் போரில் புதிதாக இறங்கியவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது ஆனால், மணப்பெண்ணை வரவேற்கும் அவளது முகத்தில் ஏன் இவ்வளவு கடுகடுப்பு? ஒருக்கால் வேண்டாத நாட்டுப் பெண்ணாக இருக்கலாமோ?

ஆமாம், நான் யூகித்தது சரிதான். ரகு என்ற அந்த வாலிபன் ஒரு ஜமீன்தாரின் மகன். ஆனால் மூளைக் கிறுக்குப் பிடித்தவன். அவன் பத்மா என்ற

நமது பிரத்யேக காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களை சுற்றி வருகிறார்.

பெண்ணின் பெருமை'யில்
சாவித்திரியும், கணேசனும்

'பெண்ணின் பெருமை' ஸெட்டிலிருந்து நான் வெளியே வந்து கொண்டிருக்கும் போது, மயோன் தர்பாரைச் சேர்ந்த ஒரு ஆள் என்னைக் கையைப் பிடித்துக் கொண்டு "மயோன் தர்பாருக்கு கூப்பிடுகிறார். வாருங்கள்'' என்று இழுத்துக் கொண்டே போய்விட்டான்.

'கண்ணின் மணிகள்'
பத்மினி

பெண்ணை மணம் செய்து கொள்ளுகிறான். இது அவனது தாயாரான ஜமீன் தாரிணிக்குப் பிடிப்பதில்லை.

'இது என்ன விஷயம்? நட்ட நடுவில் இப்படிச் சொன்னால் என்ன புரியும்' என்று நேயர்கள் கடுகடுத்த பார்வையுடன் என்னை நோக்குவதும் தெரிகிறது.

ராகினி பிலிம்சார், ரேவதி ஸ்டுடியோவில் தயாரித்து வரும் 'பெண்ணின் பெருமை' படத்தில் இந்தக்காட்சி வருகிறது. 'ரகு – பத்மா' ஜோடியாக, ஜெமினி கணேசன் – சாவித்திரி இருவரும் இதில் நடித்து வருகிறார்கள். சாந்தகுமாரி ஜமீன் தாரிணியாகவும், நாகய்யா ஜமீன்தாராகவும் வருகிறார்கள். இதே படத்தில் ஜெமினி கணேசனின் அண்ணாக சிவாஜி கணேசன் நடித்து வருகிறார். படத்தை பி. புல்லய்யா டைரக்ட் செய்து வருகிறார்.

'பெண்ணின் பெருமை'யில்
ஜமீன்தார் நாகய்யா.

சோவியத் விருந்தினர்களுக்கு, நடனம் கோபிநாத்துடன் திருவாங்கூர் சகோதரிகளும் மாலை அணிவித்தார்கள்

வீ. ஸி. சுப்பராமனின் 'கஸ்தூரி பிலிம்'ஸைச் சேர்ந்த அனைவரும் அங்கிருந்தார்கள். அந்த தர்பாரின் நடு நாயகமான சிம்மாசனத்தில் பாலய்யா உட்கார்ந்திருந்தார். எதிரே பல பெண்கள், இனிமையான இசை ஒன்றுக்கு அற்புதமாக நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.

மயோன் ஒரு காமாந்தகாரன்.. பெண்களைச் சுற்றித் திரியும் அந்த காமப் பேய்க்கு இறுதியில் தக்க முடிவுதான் ஏற்படுகிறது. அப்படிப் பட்ட மயோன், ஆட்சி செலுத்த வேண்டிய தர்பாரிலே, ஆரணங்குகளை ஆடவைத்து, மகிழ்ந்து கொண்டிருக்கிறான்!

"இதுதான் இந்தக் காட்சியின் தாத்பரியம்!" என்றார் 'சதாரம்' நண்பர்.

சதாரத்தில் இந்த நடனத்தை கலா மண்டபம் மாதவன் அமைத்திருக்கிறார். கலாதேவி என்பவர் இதில் பிரதான நடன நடிகையாகத் தோன்றுகிறார்!

• • •

வாஹினியிலே, டைரக்டர் டி. ஜானகிராம் தயாரித்து வரும் மகேஸ்வரியின் 'கண்ணின் மணிகள்' படத்தின் இரண்டு உருக்கமான காட்சிகளைப் பார்த்தேன்.

பத்மினி ஒரு குருட்டுப் பெண், தன் மனைவியை இழந்த இன்ஸ்பெக்டர் ராதா அவளைத் தன் வீட்டுக்கு அழைத்து வருகிறார்.

ஒரு நாள் ரேடியோவைத் திருப்புகிறாள் பத்மினி.

'யார் பையன்?' ஆரம்ப விழாவில் கலந்துகொண்டவர்கள்.

"நாயகர் பக்ஷமடி—எனக்கது
ஆயிரம் லக்ஷமடி!"

என்ற கவிமணியின் பாட்டு காற்றிலே மிதந்து வருகிறது.

உடனே அருகிலிருக்கும் இன்ஸ்பெக்டர், ரேடியோவை நிறுத்தி விட்டு, "ஆஹா, என்ன அற்புதமான பாட்டு!" என்று சொல்கிறார்.

குருட்டுப் பெண் பத்மினி தலை அசைக்கிறாள்.

இந்தக் காட்சிக்கு அடுத்ததாக மற்றொரு காட்சியையும் இதே செட்டில் பார்த்தேன்.

டாக்டர் சுந்தர். தற்செயலாக கண் பார்வையை இழந்து விடுகிறார். சாலையிலே தத்தி தத்தி நடக்கும் அவர் குருட்டுப் பெண பத்மினியை சந்திக்கிறார். கண் பார்வையற்ற இருவரும் தங்கள் உள்ளத்தால் சந்தித்துக் கொண்டு, உண்மைக் காதலர்களாக மாறி விடுகிறார்கள்.

இந்நிலையில் ராதா பத்மினியைத் தன்னுடன் அழைத்து வந்து அவளுக்கு நவீன ஆபரேஷன் மூலம், கண் பார்வையையும் கொடுக்கிறார்.

கண் பார்வை பெற்ற பத்மினி, தன் காதலனைத் தேடி, வீட்டுக்கு அழைத்து வருகிறாள். அவருக்கு எப்படியாவது கண் பார்வை கொடுக்க வேண்டுமென்று, ராதாவிடம் சொல்கிறாள். ராதா சம்மதிக்கிறார். அந்தச் செய்தியை சுந்தரிடம் சொல்ல வருகிறாள் பத்மினி.

அதே சமயம் துப்பாக்கி வெடி சப்தம் கேட்கிறது. பத்மினி திடுக்கிட்டவளாய், ராதாவின் அறைக்கு ஓடுகிறாள்,

'கல்கி' நினைவு நாள் கொண்டாடப்பட்டபோது, எஸ். டி. சுந்தரம் அளித்த கல்கியின் சிலையொன்றும திறந்து வைக்கப் பட்டது.

இந்தக் காட்சியைத்தான் நான் பார்த்தேன்.

"கண்ணின் மணிகள்" ஒரு ரஸமான கதை. தமிழ்த் திரையுலகுக்கு புதிய கதை இதில மற்றொரு விசேஷம் என்னவென்றால், இதில் வரும் பெரும்பாலான கதாபாத்திரங்களுக்கு அவற்றை ஏற்று நடிக்கும் நடிகர்களின் பெயரே தரப்பட்டிருப்பதாக, இதில் சுந்தர் என்ற பாத்திரத்தில் தோன்றுமபுதுமுகம், 'சுந்தர்' சொன்னார்.

சீனாவில் இந்தியத் திரைப்பட கோஷ்டியினர் மா-ஸே-துங்கையும் சந்தித்து உரையாடினார்கள்.

புதுடெல்லி சர்க்கார் பரிசளிப்பு விழாவில் வாஸன், நேருஜி, ஜனாதிபதி.

ஜனாதிபதி பரிசளிப்பு விழா

சென்ற மாதம் 21-ம் தேதி டில்லியில் 1954-ம் வருஷத்துப் படங்களின் பரிசளிப்புவிழா நடைபெற்றதல்லவா! 1954-ம் வருஷத்துப் புதுமைப் படம் என்று 'பேசும் படம்' தேர்ந்தெடுத்த 'அந்த நாள்' படத்திற்கும் 'எதிர் பாராதது' படத்திற்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. தெலுங்கில் தோடு தொங்கலு, விப்ர நாராயணா இரண்டு படங்களுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. 'சிநேகசீமா' மலையாளப் படத்திற்கும் நற்சாட்சிப் பத்திரம் அளிக்கப்பட்டது.

அகடமியின் அறிக்கை

திரைப்படவுலகில் சிறந்த தாயரிப்பாளர் அல்லது டைரக்டர், சிறந்த நடிகர் அல்லது நடிகை ஆகியோருக்கென இரண்டு பரிசுகளை வழங்க சங்கீத நாடக அகடமி முடிவு செய்திருக்கிறது. வரப்போகும் மார்ச் மாதத்தில் இதற்கான பரிசுகள் வழங்கப்படும். அபிப்பிராயம் தெரிவிக்க விரும்புவோர் ஜனவரி 31-ம் 'தேதிக்குள 'சங்கீத நாடக அகடமி' 70, ரீகல் பில்டிங்ஸ், புது டெல்லி' என்ற விலாசத்துக்கு எழுதி அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்ற மாதம் 24, 25 தேதிகளில் புயல் நிதிக்கான 'கலாமண்ட'பத்தின் கலை நிகழ்ச்சிகளுக்கு முறையே சென்னை கவர்னரும் மேயரும் தலைமை வகித்தார்கள்.

இவர்கள் இருவரையும் பார்த்தால் காதலர்கள் என்று தெரியவில்லையா !—'தெனாலிராம'னில் ராமராவ், பானுமதி

8 அஷ்டாவதானம்

அகராதியில் 'அட்டாவதானம்' என்பதற்கு 'எட்டு காரியங்களை ஒரே சமயத்தில் சிந்தித்தல்' என்று பொருள் தரப்பட்டிருக்கிறது.

★ அட்டாவதானம் என்ற இந்த அப்பட்டமான தமிழ்ச் சொல் 'அஷ்டாவதானம்' என்ற பெயரில் ரஸிகர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். ஒரே சமயத்தில் எட்டு விதமான காரியங்களைச் செய்வதற்குத் தான் அஷ்டாவதானம் என்று பெயர். சினிமாத் தொழிலில் இத்தகைய அஷ்டாவதானிகளை இந்தப் பகுதியில் குறிப்பிட ஆரம்பித்திருக்கிறோம். அங்குரார்ப்பணமாக ஆரோகணிப்பவர்...

... பானுமதி

புது வருஷத்தில் 'பேசும் படம்' ஆரம்பித்திருக்கும் இப் புதுப் பகுதிக்கு பானுமதியை முதன் முதலாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

பானுமதி ஒரு நடிகை. நடிகை என்ற அளவில் மட்டுமின்றி, படவுலகில் நடிகையாக நுழைந்து, படிப்படியாக முன்னேறி, இன்று அவர் அடைந்திருக்கும் உன்னத நிலையை எண்ணிப் பார்க்கும்போது, படவுலகம் பெருமை கொள்வதோடல்லாது, பானுமதியின் சாதனைகளைக் கண்டு பாராட்டவும் வேண்டியிருக்கிறது.

பானுமதி 1924-ம் ஆண்டில் பிறந்தார். சுமார் 1936-ம் ஆண்டில் அவரது படவுலகப் பிரவேசம் நடைபெற்றது. எடுத்த எடுப்பிலேயே அவர் கதாநாயகியாக நடித்தார். அவரது நடிப்பு மிகவும் பாராட்டப்பட்டதுடன், "'வரதக்ஷிணையின் கொடுமைக்காக ஆத்ம தியாகம்' செய்வதாக அமைந்திருந்த பானுமதியின் நடிப்பைக் கண்டு அநேக கல் நெஞ்சர்கள் மனம் திருந்தினர்கள்" என்று, அவரது நடிப்பைப் பற்றிய பத்திரிகை விமர்சனங்கள் கூறுகின்றன. தனது முதல்படத்திலேயே அமோகமான புகழைப் பெற்றார் பானுமதி.

1956-ல் அவர் படவுலகில் காலடியெடுத்துவைத்த இருபதாண்டுகளில் பானுமதி பல அற்புத சாதனைகளைச் செய்திருக்கிறார்.

குணசித்திர நடிகையான பானுமதிக்கு குறும்புக்கார பாத்திரங்கள் என்றால் அலாதியான குஷி!

இன்றைய தினம் அவர் ஒரு ஸ்டூடியோ முதலாளினி, படத்தயாரிப்புக் கம்பெனியின் உரிமையாளர், பட டைரக்டர், சங்கீத டைரக்டர், கதாசிரியை, பாடகி, நடிகை இந்தப் பொறுப்புக்களை ஏற்றுத் திறம்பட நிர்வகித்து வந்திருக்கிறார்.

அடுத்து வரும் பக்கங்களில் பானுமதி பல பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்களை ஏற்றுப் பணி புரிவதை படமெடுத்துப் பிரசுரம் செய்திருக்கிறோம். இதன் மூலம் திரைமறைவில் பானுமதியின் பணிகளை ரஸிகர்கள் தெரிந்து கொள்ளலாம்.

நடிகை என்ற அளவில் மட்டுமல்லாது, இதர எட்டு ரகமான வேலைகளையும் அவர் செய்வதால் 'அஷ்டாவதானி பானுமதி' என்று நாம் அவரை அறிமுகப் படுத்தவும் விரும்புகிறோம்.



பானுமதி நடிகையாக; ஜெமினியின் 'அபூர்வ சகோதரர்கள்' படப்பிடிப்பின்போது எடுத்த படம்.

படவுலகின் பொறுப்பு வாய்ந்த எட்டு வேலைகளை பானுமதி செய்து வந்திருக்கிறார்; வருகிறார்.

'பரணி ஸ்டுடியோ'வின் நிர்வாகப் பொறுப்பிலும் தன் கணவர் ராமகிருஷ்ணுவுடன் பங்கெடுத்து உழைக்கும் பானுமதி ஒரு நல்ல எழுத்தாளர். அவரது கதைகளும் கட்டுரைகளும் தெலுங்குப் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. பரணியின் சார்பில் தயாரான காதல், சண்டிராணி படக்கதைகள் இரண்டும்

பரணி தயாரிப்பான 'காதல்', 'சண்டிராணி' கதாசிரியையும் இதே பானுமதிதான்.



'சண்டிராணி' ஹிந்திப் பதிபபிற்கு சங்கீத டைரக்டராகவும் பணியாற்றினா.

பானுமதி எழுதியவையே யாகும்.

பானுமதி ஒரு சிறந்த நடிகை என்பது நாம ரஸிகர்களுக்குத் சொல்லி தெரிய வேண்டியதில்லை. தென்னிந்தியாவின் சிறந்த நடிகைகளில் அவர் ஒருவர் என்பதில் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்க முடியாது.

பானுமதியை அடுத்தபடியாக நாம் காண்பது தயாரிப்பாளர், டைரக்டர் தோரணையில்தான். 'சண்டிராணி'யில் இரு வேஷங்களை ஏற்று நடித்ததுடனின்றி தமிழ்,

'ஹலோ!' என்றழைத்து ஸ்டுடியோ நடவடிக்கைகளையும் கவனிக்கிறார் ஸ்டுடியோ முதலாளினி

'சண்டிராணி'க்காக ஒரு பாடலைப் பாடுகிறார்.

தெலுங்கு, ஹிந்தி மூன்று பாஷைகளில் அதைத் தயாரித்து வெளியிட்டார். முதன் முதலாக மூன்று பாஷைப் படமொன்றை டைரக்ட் செய்த பெண்மணி அவர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பானுமதிக்கு பின்னணி தேவையில்லை. அவரே தனக்குப் பின்னணியில் பாடி 'பின்னணிப் பாடகி'யின் வேலையையும் பூர்த்தி செய்து விடுகிறார். நல்ல சங்கீத ஞானமும் அவருக்கு இருக்கிறது. சண்டிராணியின் சங்கீத டைரக்ஷன் இவருடையது தான் என்பதைச் சொல்ல விரும்புகிறோம். தான் நடிக்கும் வெளிப்படங்களிலும் சில

ஆசைக் கணவருடன்.



காமிரா கோணத்தை நிர்ணயிக்கிருர் 'சண்டி ராணி' டைரக்டர் பானுமதி.

பாட்டுக்களுக்கு இவர் சொந்தமாக மெட்டமைத்துக் கொள்வதும் உண்டு.

ஸ்டுடியோ முதலாளி, படத்தயாரிப்பாளர், டைரக்டர், நடிகை, கதாசிரியை, பின்னணிப் பாடகி, சங்கீத டைரக்டர் ஆக ஏழு தோற்றங்களில் நாம் கண்ட பானுமதி, ஓர் ஆதர்ச அன்னையாகவும் விளங்குகிருர். அவரது ஏக புத்திரன் பரணியின் மீது அவருக்கு எவ்வளவு வாஞ்சை தெரியுமா?

ஆகவே பானுமதியை ஒரு 'அஷ்டாவதானி' என்று சொல்வது எவ்வளவு பொருத்தம்!

குடும்ப ஸ்திரீயாக பரணியின் உபநயனத்தின் போது.

★ வி.எம். ஏழுமலை ★

பழையன கழிதலும் புதியன புகுதலும் வேண்டும் என்று சொல்லுகிருர்களே, அது எல்லாவற்றிற்கும் ஏற்றதாக இருப்பதில்லை. ஹாஸ்யம் முக்கியமான உதாரணம். மக்களில் பெரும்பாலோர் கிராமிய ஹாஸ்யத்தை விரும்புகிருர்கள். சிரிப்பூட்டுவதற்கென்றே செய்யப்படும் கோணங்கித்தனங்களை விட, இயற்கையான பேச்சாலும் கிராம மக்களின் நடை, உடை, பாவனைகளைப் பிரதி பலிக்கும் நடிப்பாலும் புகழ் பெற்றிருக்கிருர்கள் சிலர். அனுபவம் முதிர்ந்த பழம் நடிகர் வி. எம். ஏழுமலை இந்தக் கிராமிய வகையைச் சேர்ந்த ஹாஸ்ய நடிகராகும்.

ஏழுமலையின் ஹாஸ்யம் இயற்கையானதாக இருக்கும். தனது பாத்திரத்தில் லயித்து நடிக்கிருர் அவர். கலை உலகிலே அவருக்குச் சுமார் நாற்பத்தி எட்டு வருஷ அனுபவம் உண்டு. நாடக உலகில் பல பாத்திரங்களையும் ஏற்று நடித்த ஏழுமலை, ஹாஸ்ய பாகத்தில் மட்டும் நடித்ததே கிடையாது. பட உலகில்தான் அவர் முதன் முதல் ஹாஸ்ய வேஷம் போட்டார். பல நாடக நடிகர்களுக்கும் ஏழுமலைக்கும் எனக்குத் தெரிந்து ஒரு முக்கியமான வித்தியாசம்உண்டு. மற்றவர்கள் பல நாடகக் கம்பெனிகளில் நடிகர்களாக இருந்திருக்கிருர்கள். அதம பட்சம் அவர்கள் இரண்டு கம்பெனிகளிலாவது நடிகர்களாக இருந்திருப்பார்கள்.

வாழ்க்கை சித்திரம்

ஆனல் ஏழுமலை ஒரே ஒரு கம்பெனியில்—அதுவும் மிகப் பிரபலமாக இருந்த கன்னையா கம்பெனியில்தான் நடிகராக இருந்திருக்கிருர். அந்த நாடகக் கம்பெனியில் அவர் சுமார் இருபத்தியொரு வருஷங்கள் நடிகராக இருந்தார். கன்னையா நாடகங்களில் நடித்து வந்த காலம் அது.

இன்றைக்குச் சுமார் ஐம்பத்தி ஐந்து வருஷங்களுக்கு முன்பு, அதாவது 1900-ம் ஆண்டில் சென்னையில் பிறந்தார் ஏழுமலை. வல்லிபுரத்தைச் சேர்ந்த மாணிக்க செட்டியார் என்பவர் தன் மனைவி மனோன்மணி அம்மாளுடன் சென்னை ராயபுரத்தில் வசித்து வந்தார். அவர் ஒரு மளிகைக் கடை வைத்து சிக்கனமாக வாழ்க்கையை நடத்தி வந்தார். இந்த தம்பதிகளின் குமாரரான ஏழுமலையும் அதே பாணியில் வளர்ந்தார். இன்றும் அப்படியே இருக்கிருர் அவர். சிலர் வருமானம் வர ஆரம்பித்ததும் அட்டகாசமாக வாழ ஆரம்பித்துவிட்டு கடைசியில் 'மார்க்கெட்'டும் போய் வேறு வருமானமும் இன்றி விலாசமில்லாமல் இருக்கிருர்களே, அப்படிப்பட்ட வாழ்க்கை நடத்தியவரல்ல ஏழுமலை செட்டியார். என்றும் ஒரே நிதானத்துடன் வாழ விரும்பும் அவர் வருமானத்தில் ஒரு பங்கைமட்டும் செலவழித்துச் சிக்கனமாக வாழ்ந்து வருகிருர். அவரது இந்த நாற்பத்தி எட்டு ஆண்டு கலையுலக வாழ்க்கையில் ஏற்றமோ இறக்கமோ இருந்ததில்லை, பாதையோடு நிதானமாக நடக்கிறவர் அவர்.

ஏழுமலை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிருர், அவ்வளவுதான் அதுகூட அதிக நாளில்லை. அவரது ஆசிரியரே அவரை நாடகக் கம்பெனியில் சேர்த்து

வீட்டார். இதிலும்கூட மற்ற நடிகர்களுக்கும் ஏழுமலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. நமது நடிகர்களில் பலர் பள்ளிக்குப் போகாமல் ஆசிரியர்களை ஏமாற்றி விட்டு தோப்பிலும் துறவிலும் விளையாடி விட்டு, வீட்டாருக்குத் தெரியாமல் நாடகக் கம்பெனியில் சேர்ந்தவர்கள். ஆனால் தன்னால் ஏழுமலையை முன்னுக்குக் கொண்டுவர முடியாதென்று நினைத்தோ என்னவோ, ஆசிரியரே அவரை நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டார்! ஏழுமலை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கடவுள் வணக்கம் பாடுவார். சாரீரம் அப்போது கணீரென்றிருக்கும். இதைக் கண்ட வாத்தியார், அவரது நண்பரான கன்னையா தன் நாடகக் கம்பெனியுடன் சென்னை வந்திருந்த போது, அவரிடம் ஏழுமலையை சிபார்சு செய்தார். ராமானுஜுலு நாயுடு என்ற அந்த ஆசிரியர் மட்டும் கன்னையாவின் நண்பராக இருந்து ஏழுமலையை கலையுலகில் தள்ளியிராவிட்டால் ஏழுமலை இன்று ஒரு மளிகைக் கடைக்காரராகவே இருந்திருப்பார்.

கன்னையா கம்பெனி அந்தச் சமயம் சென்னை ராயல் தியேட்டரில் முகாமிட்டிருந்தது. ஏழு வயது நிரம்பிய ஏழுமலை கம்பெனியில் 1907-ல் சேர்ந்த போது கன்னையா நடிகராக இருந்தார். அந்தக் கம்பெனியில் சேர்ந்தவுடனே ஏழுமலைக்கு பாவாடை, தாவணி அணிவித்தார்கள்! கண்ணாடியில் பார்த்துக் கொண்ட அவருக்கு வெட்கமாகப் போய் விட்டது! ஆகவே அவர் பெண் வேஷத்திற்கு ஏற்றவர் என்று நிர்வாகி தீர்மானித்து விட்டார்! முதலிலெல்லாம் ஏழுமலை பெண் வேஷத்தில் பாடிக் கொண்டே கோஷ்டி நடனங்களில் பங்கெடுத்துக் கொண்டார். அப்போது கோமளம் பிரதம நடிகை.

கன்னையாவின் நாடக கம்பெனியில் தனது பதினைந்தாவது வயதில் ஏழுமலை பிரதம பாலபார்ட் நடிகரானார். லவ குச, ராஜா தேசிங்கு, அலாவுதீன், ஹரிச்சந்திரா, சந்திராவளி நாடகங்களில் ஏழுமலை பாலபார்ட்டிலும் கன்னையா பிரதம பாகத்திலும் நடித்தார்கள். அதற்குப் பல வருஷங்களுக்குப் பிறகுதான் கன்னையா ஏராளமான பொருட் செலவில் "தசாவதாரம்" நாடகத்தை நடத்தினார். கம்பெனியில் அதற்குச் சமீபமாகத்தான் ஸி. வி. வி. பந்துலு, எஸ். ஜி. கிட்டப்பா, எஸ். ஜி. செல்லப்பா, பி. பி. ரங்காச்சாரி, எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி முதலியோர் நடிகர்களாகச் சேர்ந்தனர். கன்னையா அப்போது நடிப்பதை நிறுத்தி விட்டார். அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்த சரித்திர, புராணக் கதைகளெல்லாவற்றையும் கம்பெனி நாடகமாக நடத்தி விட்டது. ஏழுமலை எல்லா நாடகங்களிலும் ஏதாவதொரு பாகத்தில் நடித்து வந்தார். ஏழுமலை, ஸி. வி. வி. பந்துலு, எஸ். ஜி. செல்லப்பா, மூவரும் தசாவதாரம் நாடகத்தில் கோஷ்டி நடனத்தில் பெண்



களாக நின்று ஆடிய போது ரசிகர்கள் மெய்மறந்து(!) அனுபவித்தார்கள்!



சுமார் இருபத்தோரு வருஷங்கள் சேர்ந்தாற்போல் கன்னையா கம்பெனியில் பணியாற்றியபின் ஏழுமலை தனது இருபத்தி ஏழாவது வயதில் அதிலிருந்து விலகி தகப்பனாரைப்போல் மளிகைக் கடையை நடத்த ஆரம்பித்தார். இரண்டொரு வருஷங்களானதும் கன்னையா கம்பெனி சென்னை ராயல் தியேட்டருக்கு வந்தபோது, கன்னையா அழைப்புக்கிணங்க, ஏழுமலை மீண்டும் அதே கம்பெனியில் சேர்ந்தார். சில மாதங்களில் கன்னையா காலமாகிவிட்டார். நிர்வாகமும் சரிவர இல்லை. இனிப் பிரயோஜனமில்லை யெனத் தீர்மானித்து அதிலிருந்து விலகிவிட்டார். அப்போது சில நாடகக் கம்பெனிகளிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. ஆனால் கன்னையாவுடன் இருந்த பிறகு மற்ற கம்பெனிகளுக்குப் போவதற்கு ஏழுமலைக்கு பிடிக்கவில்லை. ஆகவே அவர் நாடக உலகிலிருந்து ரிடையராகி விட்டார்.

நாடகங்களில் நடித்துக் கொண்டிருக்கும்போது ஏழுமலை ஹட்சின்ஸ் கம்பெனியாரின் நாடக இசைத் தட்டுகளில் பங்கெடுத்துக் கொண்டிருந்தார். குலேபகாவலி, மனோஹரா, தசாவதாரம் நாடக செட்டுகளில் பாடும் போது மங்களதாஸ் பாடல்கள் எழுதி வந்தார். பாடல்கள் இயற்றுவாரே தவிர அவருக்கு பாட வராது. ஏழுமலை அவருக்கு உதவி செய்வார். அந்த மங்களதாஸ் பிறகு சினிமா உலகில் பிரவேசித்தார்.

சாத்தப்ப செட்டியார் அப்போது மீனாட்சி சினிடோனை ஆரம்பித்து 'லங்கா தகனம்' படத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தார். ஸி. வி. ராமன் அந்தப் படத்தின் டைரக்டர். ரத்னாபாய், சரஸ்வதி பாய் சகோதரிகளுக்கு அதில் பங்குண்டு. மங்களதாஸ் பாடல்களை இயற்றியதும் சகோதரிகளிடம் போனார். தன்னுடன் அவர் ஏழுமலையை

அழைத்துச் சென்றார். ஏழுமலை பாடிக்காட்டினார். அப்போது தனக்குச் சினிமாப் பிரவேச யோகம் இருக்குமென்பதே ஏழுமலைக்கு தெரியாது. சகோதரிகள் செட்டியாரிடம் ஏழுமலையைப் பற்றிச் சிபார்சு செய்தார்கள். உடனடியாக ஏழுமலை மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் ஒப்பந்தமானார்!

முதல்நாள் படப்பிடிப்பு வெளிப்புறக் காட்சியுடன் ஆரம்பமாயிற்று. ஏழுமலை வண்ணான் மேக்-அப்போடு தயாராகிய போது எதிரே வந்து நின்றார் வண்ணாத்தி! அந்த நடிகை யார் என்று தெரியுமா! சாட்சாத் அங்கமுத்துவேதான்! இப்போது இருப்பதைப் போலில்லாமல் அங்கமுத்து அப்போது இன்னும் கட்டை குட்டையாய் இருந்தார்! ஏழுமலை அவரிடம் நடுங்கும் கட்டத்தில் அற்புதமாக-நிஜமாகவே நடுங்கி நடித்தார்! அந்தப் படத்தின் மூலமே ஏழுமலை ஹாஸ்ய நடிகரானார். ஏழுமலை ஹாஸ்ய பாத்திரத்தில் நன்கு சோபிக்கக் கூடியவர் என்பதை

அறிந்து அவரை வண்ணாக்கியவர்கள் ஆர். பிரகாஷும் ஸி. வி. ராமனும்தான். அங்கமுத்துவுடனும் தனியாகவும் ஏழுமலை அந்தப் படத்தில் பின்னணியின்றி தானே பாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கமுத்துவும் பாடினார் என்பது அதைவிட முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும்!

முதல் படத்திலேயே ஏழுமலை ஹாஸ்ய பாகத்தில் திறமையோடு நடித்ததால் அடுத்தபடியாக மீனாட்சி சினிடோன் தயாரிக்கவிருந்த மூன்று படங்களுக்கும் அவர் ஒப்பந்தமானார். லங்காதகனத்துக்குப் பிறகு அதிருப அமராவதி, கிருஷ்ண நாரதி, நளாயினி மூன்று படங்களிலும் ஹாஸ்ய பாகத்தில் ஏழுமலை நடித்தார். இந்த நான்கு படங்களும் இரண்டு மாதங்களுக்கொன்றாகத் தயாரானவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு காளிதாஸ் பிலிம்ஸார் பம்பாயில் மதராஸ் எக்ஸ்பிரஸ் என்ற படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அவர்கள் ஏழுமலையை ஹாஸ்ய பாகத்திற்காக அழைத்துச் சென்றார்கள். அதற்கு டைரக்டர் கிடையாது! தினசரி ஒவ்வொரு புது நபர் டைரக்ட் செய்வார். ஸ்டுடியோ கிடையாது! தினம் தினம் வெவ்வேறு ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடக்கும்! தசரதராவை பிரதம நடிகராகக் கொண்ட அப்படம் பெயரை மாற்றிக் கொண்டு "வீர கர்ஜனை" என்ற பெயரில் திரைக்கு வந்தது. ஆனால் வீர கர்ஜனை புரியவில்லை! பம்பாய் சென்றுவந்த திருப்தியுடன் கல்கத்தா வாசமும் ஏழுமலைக்கு கிடைத்தது. ஸி. வி. ராமன் 'லக்ஷ்மி' அல்லது 'ஹரிஜன மங்கை' என்ற படத்தை கல்கத்தாவில் தயாரித்தார். சிறுகளத்தூர் சாமா, எம். எஸ். விஜயாள் இருவரையும் பிரதம பாகத்தில் கொண்ட அந்தப் படத்தின் பிரதம காமெடியன் ஏழுமலைதான்.

தென்னிந்தியாவில் அப்போது வேல் பிக்சர்ஸ் அமர்க்களப்பட்டது. சென்னையில் சொந்த தியேட்டர்களும் சொந்த ஸ்டுடியோவும் கொண்டிருந்த அந்தக் கம்பெனி படத்தில் நடிக்கும் சந்தர்ப்பத்தை ஏழுமலை எதிர்பார்த்திருந்தார். சந்தர்ப்பமும் வாய்த்தது. இசையரசர் எம். எம். தண்டபாணி தேசிகரையும் எம். எஸ். தேவசேனாவையும் பிரதம பாகத்தில் கொண்ட "வள்ளாள மகாராஜா" படத்தில் நட்டுவனார் வேஷம் போட்டார் ஏழுமலை. சங்கர் டைரக்ட் செய்த அந்தப் படத்தை பிராட்வே டாக்கீஸில் போட்டுப் பார்த்தார்கள். தயாரிப்பாளர் எம். டி. ராஜன் படத்தைப் பார்த்ததும் ஏழுமலையை அழைத்து, மறுதினம் வந்து சந்திக்கும்படிக் கூறினார். மறு தினம் ஸ்டுடியோவுக்குச் சென்ற ஏழுமலையை மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் நிரந்தர நடிகராக அமர்த்திக் கொண்டார்கள். காலஞ்சென்ற நடிகர்கள் எஸ். வி. சுப்பய்யா பாகவதர்–ஸ்வர்ணம்பாள் இருவரும் பிரதம பாகத்தில் நடித்த 'கம்பர்' படத்தில் ஏழுமலை ஹாஸ்ய பாகத்தில் வெளுத்துவிட்டார். அடுத்தபடியாக டி. ஏ. மதுரம், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி இவர்களுடன் காளி ரத்தினம், ஏழுமலை இருவரும் நடித்தனர். இந்த இரண்டு படங்களும் ஏழுமலைக்கு நல்ல புகழைக் கொடுத்தன.

திருச்சி ஜெயபாரதம் பிலிம் கம்பெனியார் மாடர்ன் தியேட்டர்ஸில் 'தாயுமானவர்' படத்தயாரிப்பில் ஈடுபட்ட அந்தச் சமயத்தில் வேல் பிக்சர்ஸ் ஸ்தாபனம் நிறுத்தப்பட்டதால் ஏழுமலை சேலம் சென்றார். டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்த அப்படத்தில் தண்டபாணி தேசிகர், ஸி. எஸ். செல்வரத்தினம் பிள்ளை, ஏழுமலை முதலியோர் நடித்தனர். படத்தயாரிப்பு முடிந்ததும் ஏழுமலை சென்னை திரும்பினார். விரைவில் மாடர்ன்

தியேட்டர்ஸிலிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்புக்குப் பிறகு பல வருஷங்கள் வரை ஏழுமலை சென்னைப் பக்கம் வரவில்லை. அவரது நிரந்தர வாசம் சேலம் என்று தீர்மானமாகியது. வல்லிபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஏழுமலை வல்லிபுரத்தையே இன்று வரை பார்த்ததில்லை. சென்னையிலே வளர்ந்த அவர் நிரந்தரமான சேலம் வாசியாகி விட்டார். எஸ். டி. சுப்பய்யா, யு. ஆர். ஜீவரத்தினம், கொக்கோ முதலியோர் நடித்த 'சதி மகாநந்தா' படத்தில் ஏழுமலை முதன் முதலாக நடித்தார். அதன் பிறகு அவருக்கு ராஜயோக ஜாதகம்தான். உடனே 'ராஜயோகம்' படத்தில் நடித்தார்!

ராஜயோகம் கிடைத்ததும் 'உத்தம புத்திர'னில் நடித்தார். காலஞ் சென்ற தவநடிகர்களான பி. யு. சின்னப்பா, காளி என். ரத்தினம் இருவருடன், காலஞ்சென்ற எஸ். எஸ். கொக்கோ, இன்றைய நடிகர்களான எம். வி. ராஜம்மா, ஏழுமலை, யு. ஆர். ஜீவரத்தினம் இவர்களுககும் மகத்தான புகழ் கொடுத்த அந்தப் படத்தின் மூலமே மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்தாபனமும் நிறைய புகழும் பலமும் பெற்றதென்றால் மிகையாகாது. அதற்கடுத்தபடி ஏழுமலை புகழ்பெற்ற படம் 'பக்த கௌரி.' காளி ரத்தினம், ஏழுமலை, டி. எஸ். துரைராஜ், எம். ஆர். சுவாமிநாதன் போன்ற பல நடிகர்கள் ஹாஸ்ய பாகத்தில் தோன்றி சக்கை போடு போட்டு விட்டார்கள். எஸ். டி. சுப்பய்யா, ஜீவரத்தினம் இருவரின் பாடல்களும் சிறப்பாக இருந்தன. பி. எஸ். சிவபாக்கியம் கொடுமைக்கார மாமியாராகத் தோன்றி திறம்பட நடித்தார். மாடர்ன் தியேட்டர்ஸுக்கு மகத்தான வெற்றி யளித்த அந்தப் படம் ஏழுமலைக்கு ஏராளமான ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொடுத்தது. அதற்கு முன்பே 'சிரிக்காதே' படத்தில் ஏழுமலை நடித்தார்,

பக்த கௌரிக்குப் பின் பஞ்சாமிர்தம், தயாளன், சித்ரா, பிருதிவிராஜ், பர்மாராணி, சதிசுகன்யா, திவான் பகதூர், ஆதித்தன் கனவு, போஜன், அபூர்வ சிந்தாமணி, தேவகி, கல்யாணி, வாழ்க்கை, வேலைக்காரன், கன்னிகா, திகம்பர சாமியார், ஜீவிதம் போன்ற படங்களில் ஏழுமலை நடித்தார். 'வாழ்க்கை'யின் மூலம் பல வருஷங்களுக்குப் பிறகு சென்னை வந்தார் ஏழுமலை. அசோகனின் வீட்டு வேலைக்காரனாக வந்து, குழந்தை அழாமலிருக்க வேண்டுமென்பதற்காக, பாட்டு பாடும் வேலைக்காரனாக வந்து சபையில் அவுட்டுச் சிரிப்பைக் கிளப்பிய ஏழுமலை உடனடியாக 'வேலைக்காரன்' படத்திற்கு ஒப்பந்தமானார். படம் அவருக்கு மிகுந்த புகழ் கொடுக்கவே செய்தது.

இவைகள் தவிர மதனமோகினி, பொன்னி, மலைக்கள்ளன், ஜமீன்தார், மனோஹரா படங்களிலும் நடித்தார் ஏழுமலை. இந்தத் தொடர்ச்சியில் ஒரு சரியான நபரிடம் ஏழுமலை மாட்டிக் கொண்டார். எம். ஏ. வேணுவைத்தான் குறிப்பிடுகிறேன்! நால்வர் படத்திற்குப்பின் எம். ஏ. வி. பிக்சர்ஸ் என்ற தனி தயாரிப்பு கம்பெனியை ஆரம்பித்த வேணு, சிலரை தன் சகாக்களாக்கிக் கொண்டார் என்றே சொல்லவேண்டும். கே. சோமு, ஏ. பி. நாகராஜன், ஏழுமலை, நம்பியார், ஏ. கருணாநிதி இவர்களடங்கிய ஒரு குடும்பத்தை வேணு நடத்துகிறார் என்றே துணிந்து கூறலாம். இந்தக் குடும்பம் 'மாங்கல்யம்' படத்தை முதலில் தயாரித்தது! நாடகக் கம்பெனி மானேஜராக ஏழுமலையும் கூஜா மணியாக ஏ. கருணாநிதியும் வந்து ரசிகர்களை ஹாஸ்யக் கடலில் அமிழ்த்தி மூச்சுத் திணற வைத்து விட்டார்கள்! இதனால் பெண்ணரசி, டவுன் பஸ் இரண்டு படங்களிலும் ஏழுமலை சந்தர்ப்பம் பெற்றார் என்பதைத் தனியாகக் குறிப்பிட வேண்டியதில்லை. ஏறக் குறைய இதே சமயம் ஆசை அண்ணா அருமைத் தம்பி, நல்ல தங்கை, செல்லபிள்ளை, மிஸ்ஸியம்மா படங்களில் ஏழுமலை நடித்தார். மிஸ்ஸியம்மா அவருக்குப் புகழுடன் மற்றொரு சீரீஸையும் ஏற்படுத்திக் கொடுத்தது. விஜயாவின் படங்களிலே அவர் தொடர்ந்து நடிக்க உதவியவள் மிஸ்ஸியம்மாதான். விஜயாவின் 'குணசுந்தரி' ஏழுமலை நடித்து கடைசியாகத் திரையிடப்பட்ட படம். உத்தேசப்படி கோகிலவாணி, நல்ல தங்காள் இரண்டும் இவ்விதழ் வரும்போது திரையிடப்பட்டிருக்க வேண்டும்!

நான் பெற்ற செல்வத்தில்
சிவாஜி கணேசனோடு வி. எம். ஏழுமலை

ஏழுமலை தற்போது நான் பெற்ற செல்வம், சாரங்கதரா, தெருப் பாடகன், சந்திப்பு முதலிய படங்களில் நடித்து வருகிறார். அத்துடன் செங்கமலத் தீவு, சம்பூர்ண ராமாயணம், மாயாபஜார் முதலியவற்றிலும் நடிப்பார். ஏழுமலைக்கு கிராமிய ரக ஹாஸ்யம் ரொம்பவும் பிடிக்கும். காளி ரத்தினத்தின் ஹாஸ்யத்தை அவர் சிலாகித்துப் பேசுகிறார். மாதுரிதேவியை பாண்டுரங்கா படத்திற்குச் சிபார்சு செய்தார் ஏழுமலை. ஆர். பத்மா அவர் மூலம் திரையுலகுக்கு வந்தவர்.

ஏழுமலை ஏராளமான படங்களில் நடித்திருந்த போதிலும் அபூர்வ சிந்தாமணி, உத்தம புத்திரன், பக்த கௌரி, மிஸ்ஸியம்மா, வாழ்க்கை, நால்வர், மாங்கல்யம் இவை

தான் அவருக்குப் பிடித்தமானவை. அவைகளில் அவர் தன் நடிப்பை தானே ரொம்பவும் ரசிக்கிறாராம். ஏழுமலை சென்ற சுமார் பதினைந்து வருஷங்களாக சேலத்திலேயே வசித்து வருகிறார். அவர் ஆங்கில படங்களை பார்ப்பதில்லை. தமிழ்ப் படங்கள்கூட யாராவது கோஷ்டி சேர்ந்தால் தான் பார்ப்பார்.

ஏழுமலை தனது இருபதாவது வயதில், அதாவது 1920-ல் சென்னை சூளையைச் சேர்ந்த கோவிந்தம்மாவை திருமணம் செய்து கொண்டார். இந்த அன்புத் தம்பதிகளுக்கு ஏழு குழந்தைகள் பிறந்தன. துரதிருஷ்டவசமாக நால்வரை இழந்தனர் அவர்கள். தற்போது சண்முகம் என்ற மகனும் நவனீதம் (சமீபத்தில்தான் இவருக்கு மணமாகியது), மங்கையர்க்கரசி என்ற இருபுதல்வியரும் இருக்கிறார்கள். தனக்களிக்கப்படும் பாத்திரம் எப்படிப் பட்டதாயிருந்தாலும் சுவைபடச் சித்தரித்துக் காட்டி ரசிகர்களின் பாராட்டைப் பெற்று விடுகிறார் ஏழுமலை. சினிமாத் தொழிலில் எத்தனையோ பேர் தோன்றி அமர்க்களப்படுத்தி மறைந்தும் விட்டனர். அப்படியின்றி என்றும் சிரஞ்சீவி போல, பட உலகில் புகுந்தது முதல் நிரந்தர ஹாஸ்ய நடிகராகப் பணிபுரிந்து வருகிற ஒரு சிலரில் ஏழுமலையும் சேர்க்கப்பட வேண்டியவர். அவர் உண்மையுடன் தொழில் செய்வதும், கிடைக்கும் பணத்தை 'செட்டி பிள்ளை கெட்டி பிள்ளை'யாக இருந்து வரவு செலவு செய்வதுமே அவரது இன்றைய நிலைக்குக் காரணம். படத்தொழில் நிரந்தர வருமானம் தரும் தொழிலல்ல. சிலர் தொடர்ந்து பணியாற்றினாலும்கூட மதில்மேல் பூனை கதையைப் போன்றதுதான் படத்தொழிலின் நிலையும். ஆகவே, நடக்கும் வரை லாபமான' அத்தொழிலில் கையைக் கட்டி வாயைக் கட்டிச் சேர்க்க வேண்டியது பிற்காலத்துக்கு உதவு மென்பதை பல நடிகர்கள் உணராதது குறித்து வருந்தவே வேண்டியிருக்கிறது.

சொந்தப்படம் எடுக்கப்போகும் உத்தேசம் உண்டா, என்று அவரைக் கேட்டபோது கையைக் கூப்பி தலையை இல்லை யென்பதுபோல் அசைத்தபோது தலையே விழுந்து விடும்போலிருந்தது! அதைப்பற்றி அவர் கனவு கண்டால் கூடப் பயந்து எழுந்து விடுவார்! ஏழுமலை ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர். காளி ரத்தினத்திற்கு பிறகு அந்தப் பாணியில் போகும் ஹாஸ்ய நடிகர் ஏழுமலை தான் என்றே சொல்லலாம். ஆடம்பரம், வீண் டம்பம் எல்லாம் இல்லாத அனுபவ நடிகரான ஏழுமலையின் வாழ்க்கையை நம் நடிகர்களில் பலர் பின்பற்ற வேண்டும்.

—எஸ். வி. ஸம்பத்குமார்.

1956 எண்ணமும் எதிர்பார்த்தலும்

பேசும் படம் ஆண்டு மலரில் 'எனக்குப் பிடித்த வேஷம்' என்றபகுதியில், 'குருட்டுப் பெண்ணாக நடிக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக விருப்பம் உண்டு. அந்த வேஷத்தில் நடிக்க நான் ஆசைப்படுகிறேன்' என்று சொல்லியிருந்தேன். 'கண்ணின் மணிகள்' என்ற படத்தில் நான் இந்த வேஷத்தில் நடித்து வருகிறேன். புத்தாண்டில் வெளிவரப் போகிறது இப்படம். இது தவிர, எனது ஐரோப்பிய பிரயாணத்தையும் இந்த ஆண்டில் மேற்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.

— பத்மினி.

'சிவாஜி பிலிம்ஸ் லிமிடெட்' என்ற படவிநியோகக்கம்பெனியைநான் ஆரம்பித்திருக்கிறேன். புத்தாண்டில் இந்தக் கம்பெனி வேலை செய்ய ஆரம்பித்து விடும். அதுமட்டுமல்ல, 'சிவாஜி' என்று எனக்கு அடைமொழி வரக் காரணமாக இருந்த அந்த வேஷத்தையே புத்தாண்டில் நான் திரையில் ஏற்று நடிக்கப் போகிறேன். என் வாழ்நாளிலேயே மகத்தானதொரு வேஷம் இது. இன்னுமொன்று. இந்தப் படத்தயாரிப்பில் நானும் ஓரளவுக்குச் சம்பந்தப்படப் போகிறேன். அதாவது இதன் படத் தயாரிப்பாளர்களில் ஒருவனாகவும் இருக்கிறேன்.

— சிவாஜி கணேசன்.

என் ஆசையெல்லாம் என் அருமைச் செல்வன் பரணியுடன் இன்னும் அதிக நேரம் இருக்க வேண்டும் என்பதே. இதற்காக மாம்பலத்திலுள்ள எனது வீட்டை காலி செய்து, என் ஸ்டுடியோவுக்குள்ளாகவே ஒரு வீட்டைக் கட்டிக் கொள்ள முடிவு செய்திருக்கிறேன். புத்தாண்டில் இது பூர்த்தியாகலாம். என் படக் கம்பெனியின் சார்பில் மூன்று படங்களும் இந்த ஆண்டு வெளிவரப் போகின்றன.

— பி. பானுமதி.

ஹாஸ்யமும் சோகமும் நிரம்பிய கதா பாத்திரமொன்றில் நடிக்க வேண்டும் என்று எனக்கொரு ஆசை உண்டு. இத்தகைய பாத்திரம் புது வருஷத்தில் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறேன். எனது சொந்த ஊரான நாச்சியார் கோயிலில் முதல்தர போட்டோ ஸ்டுடியோ ஒன்றையும் இந்த ஆண்டு முடிவுக்குள் ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

— ஏ. கருணாநிதி.

நாராயணன் கம்பெனியாரின் ஹிந்தி 'கணவனே கண்கண்ட தெய்வம்' படத்தில் நான் நடிக்கப் போகிறேன். நான் நடிக்கும் இந்த முதல் ஹிந்திப் படமான 'தேவதா'விலிருந்து தொடர்ந்து ஹிந்திப் படங்களிலும் நடிக்க எனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

— குசலகுமாரி.

பழைய படங்கள் எல்லாம் இப்போது மீண்டும் தயாராகின்றன. இந்த நிலை மாறி புத்தம் புதிய கருத்துக்

களுடன் கூடிய கதைகள் படமாகும் வகையில் படவுலக-ரஸிகர்களின் மனோ பாவம் மாற வேண்டும். — எம். கே. ராதா.

1956-ல் சென்னை தியாகராய நகரில் நான் கட்டிவரும் புது மனைக்கு கிரகப்பிரவேசம் செய்யப்போகிறேன். ஏவி. எம். மின் 'சோரி சோரி', ஜுபிடரின் 'நயா-ஆத்மி' இரண்டு ஹிந்திப் படங்களும் இவ்வாண்டு வெளிவரப் போகின்றன இந்தப் படங்களின் மூலம் ஹிந்திப் படங்களில் நடிக்க அதிக 'சான்ஸ்' கிடைக்கலாம். — ராஜசுலோசனா.

போதும்! போதும் 1955-ல் வந்த புயலின் கொடுமை! புத்தாண்டில் புயலே வராமலிருந்தால் ரொம்பவும் நல்லது. —டி. பாலசுப்ரமணியம்.

'நாமும் படமெடுத்தோம்; வெளியிட்டோம்; கடையைக் கட்டினோம்' என்ற 'நிலையில்லாத' படமுதலாளிகளின் எண்ணிக்கை 1956-ல் குறைய வேண்டும். நல்ல படமுதலாளிகளின் எண்ணிக்கை இதற்கு இரட்டிப்பு மடங்கில் வரவேண்டும். வர்ணப் படங்களுக்கும் அதிக மவுஸ் இருக்கலாம். —'பிரண்ட்' ராமசாமி.

தொடர்ந்து சில பெரிய படங்களில் கதாநாயகனாக நடிக்கும் சந்தர்ப்பங்களை எதிர்பார்க்கிறேன். ஏராளமான நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டு நடிக்க விருப்புகிறேன். குறைந்த பக்ஷம் ஒரு நல்ல நாடகத்தை நானாவது தயாரித்து நடிக்கப் போகிறேன்.

— என். என். கண்ணப்பா.

வர்ணப் படமான அலிபாபாவில் நான் நடித்திருக்கிறேன். புத்தாண்டில் மேலும் சில வர்ணப் படங்கள் தயாராகலாம். கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பையும் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

— எம். என். ராஜம்.

'தயாரிக்கப் போகிறேன்; தயாரிக்கப் போகிறேன்' என்று சென்ற வருஷம் முதல் சொல்லிக் கொண்டிருந்த 'ராமதாஸ்' படத்தை இந்த ஆண்டில் நிச்சயம் தயாரிக்கப் போகிறேன். வெள்ளம், புயல் மற்றும் இவை போன்ற கோர சம்பவங்கள் நம் நாட்டில் இடம் பெருமலிருக்கும் என்றும் நினைக்கிறேன்.

— வி. நாகய்யா.

வெற்றிப் படங்களின் எண்ணிக்கை மேலே மேலே போக வேண்டும். தோல்விப் படங்களின் எண்ணிக்கை கீழே கீழே இறங்க வேண்டும். 1956-ல் நான் காண விரும்புவதும், நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பதும் இதுதான். — சாவித்திரி.

கன்னடப் படங்களில் எனக்கு அதிகப்படியான 'சான்ஸ்' கிடைக்கும் என்று நினைக்கிறேன். எப்படியாவது இந்த வருஷத்திற்குள் ஒரு தமிழ்ப் படத்தில் கதா நாயகனாக நடித்து விடவேண்டும் —மோகன்.

உண்மைக் கலைஞர்களுக்கு உரிய மதிப்பு கிடைப்பதில்லை. 1956-ல் இந்த நிலை மாறி விடும் என்று எதிர்பார்க்கிறோம். ஒரு புது வீடு கட்டவும் 'பிளான்' போடுகிறோம்-தனம்-சுசிலா.

ஹிந்திப் படத்தில் நான் நடிக்க ஆரம்பித்திருக்கிறேன். புது வருஷத்தில எனது ஹிந்திப்படப் பிரவேசம் வெற்றிகரமாக விளங்கும் என்று எதிர்பார்க்கிறேன். சென்ற வருஷமே புது கார் வாங்கி விட்டேனல்லவா; அப்படியானால் இந்த வருஷம் நிச்சயம் நான் ஒரு வீட்டைத்தானே கட்டியாக வேண்டும்!

—'ஜெமினி' கணேசன்.

உருக்கமான பாத்திரங்களை ஏற்று நடிப்பதில் எனக்கு அபார பிரியம் உண்டு. புது வருஷத்தில் இப்படியொரு பாத்திரம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

— லக்ஷ்மிபிரபா.

புது வருஷத்தில் ஹிந்திப்பட மொன்றைத் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்கிறேன். அதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் எல்லாம் எனக்குச் சரிவர அமைந்தால் தான் இந்த எண்ணம் கைகூடும். 'அம்பிகாபதி'யையும் பிரபல நடிகர்களைக் கொண்டு 'ஏ எல் எஸ்' ஸுக்காக தயாரிக்கப் போகிறேன். — பி. ஆர். பந்துலு.

புது வருஷத்தில் நான் நடிக்கும் முதல் படமான 'கண்ணின் மணிகள்' வெளி வருகிறது. இந்தப் பாத்திரம் எனக்கு எப்படித் திருப்தி அளித்ததோ, அதேபோல் எனது நடிப்பும் ரஸிகர்களுக்கும் பட உலக நண்பர்களுக்கும் திருப்தியை அளித்து எனக்கு நல்ல ஆதரவை புது வருஷம் தேடித்தரும் என்று எண்ணுகிறேன்.

— சுந்தர்

படம்! படம்! படம்! வீட்டிலே சும்மா பொழுதைக் கழிக்க நேரமில்லாத அளவுக்கு படங்கள் எனக்கு இருக்கவேண்டும்; இதேபோல் சகோதர நடிகர்களின் நிலைமையும் ஆகவேண்டும். இத்தோடு 'புல் ஸ்டாப்' வைத்து விடுகிறேன். கே. ஏ. தங்கவேலு.

புத்தாண்டில் நான் நடிக்கும் படங்கள் அனைத்தும் அமோகமான வெற்றியைப் பெறவேண்டும் என்று பிரார்த்திப்பதுடன், அப் படங்களில் நான் ஏற்று நடிக்கும் பாத்திரங்கள் ரஸிகர்களின் அன்புக்குப் பாத்திரமாக அமையவேண்டும் என்றும் நினைக்கிறேன்.

—என். டி. ராமராவ்.

கன்னடப் படமொன்றை புத்தாண்டில் தயாரித்து வெளியிட நினைக்கிறேன். படவுலகத்தின் நிலையும் தரமும் மேலும் உயரும் என்று நம்புகிறேன்.

—எம். வி. ராஜம்மா.

ஹாஸ்யச் சுவை கொண்ட பிரதம கதாபாத்திரமொன்றில் நடிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாளைய ஆசை. அதேபோல் ஐரோப்பாவுக்கும், இன்னும் இதர நாடுகளுக்கும் போய்வர வேண்டுமென்பது சிறு பிராயத்திலிருந்தே என் உடலில் ஊறியிருக்கும் விருப்பம். — ராகினி.

"சத்தியம் – சிவம் – சுந்தரம்"

சிறந்த படங்களின் பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதியின் உபதேசம்

சிறந்த படங்களுக்குப் பரிசளிக்கும் திட்டப்படி 1954-ம் ஆண்டின் சிறந்த படங்களுக்கான பரிசளிப்பு விழா சென்ற மாதம் 21-ம் தேதி டில்லி தேசீய பௌதிக ஆராய்ச்சிக் கூடத்தில் விமரிசையாக நடைபெற்றது. ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் பரிசுகளை வழங்கிய இந்த விசேஷ வைபவத்தில் பிரதமர் நேருவும் மத்திய மந்திரிகளும் அயல் நாட்டுத் தூதர்களும் படத் தயாரிப்பாளர்களும் மற்றும் பல பிரமுகர்களும் கலநது கொண்டனர்.

ராஷ்டிரபதி இந்த விழாவில் செய்த பிரசங்கம் அரசாங்கம் அளித்த பரிசுகளைவிட உயர்ந்ததாக இருந்தது. சினிமா ஒரு பொழுது போக்குச் சாதனமாக இருந்தாலும் அது கல்வியறிவூட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். சிறியவர் முதல் பெரியவர் வரை யாவரும் விரும்பும் இத்தொழில் நாட்டின் நன்மைக்கு உபயோகப் படுத்தப் படவேண்டும் என்று அபிப்பிராயப் பட்டார் ஜனாதிபதி. இத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் கடமை அதுவே என்பதையும் அவர் அறிவுறுத்தினார்.

சர்க்கார் கட்டுப்பாடுகளை விதித்து கல்வியூட்டும் சாதனமாகச் சினிமாத் தொழிலைச் செய்வதைவிட, ஜன நாயக ஆட்சி நிலவும் இந்நாட்டில், தொழில் சம்பந்தப்பட்டோர் தங்களுக்குள் கட்டுப்பாடுகளையும் தடைகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். படங்களின் தரம் உயருமானால் மக்களுடைய க்ஷேமநலன்களில் கருத்துள்ள சர்க்கார், படத்தொழில் சம்பந்தப்பட்ட புகார் விஷயததில் தலையிடாது என்று தெளிவாக எடுத்துச் சொன்னார். 'சத்யம்–சிவம்–சுந்தரம்' என்ற வாக்கை படமுதலாளிகள் கவனத்தில் கொள்ளவேண்டும் ; நல்ல தூய்மையான கருத்துள்ள கதைகளைத் தேர்ந்தெடுத்து பக்தியின் அடிப்படையில் பரிசுத்தமானதாகவும் அழகு படவும் படங்களைத் தயாரிக்க வேண்டும் என்றும் கூறிய ஜனாதிபதி நல்ல குழந்தைகளுக்கான படம் வெளிவராததற்கு வருத்தம் தெரிவித்தார்.

மினர்வா மூவிடோனின் "மிர்ஜா காலிப்" ஹிந்திப் படத்திற்கு சிறந்த படம் என்பதற்காக ராஷ்டிரபதியின் தங்கப் பதக்கமும் வெள்ளிப் பதக்கமும் பரிசளிக்கப்பட்டன. தயாரிப்பாளர் ஷோராப்மோடி இப் பரிசைப் பெற்றுக் கொண்டார். 'கைத்தறியின் ஆவி' என்ற டாக்குமெண்டரி படம் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு ராஷ்டிரபதியின் தங்கப் பதக்கம் அதற்குப் பரிசாகக் கொடுக்கபபட்டது. டார்ஜிலிங், தங்க நதி என்ற துண்டுப் படங்களுக்கும் 'நீலக்குயில்' என்ற மலையாளப் படத்துக்கும் ராஷ்டிரபதியின் நற்சாட்சி பத்திரங்கள் அளிக்கப்பட்டன.

அகில இந்திய பிலிம் பெடரேஷன் தலைவர் எஸ். எஸ். வாஸன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் இந்தப் பரிசளிப்பு முறையைப் பாராட்டி, அதனால் தொழிலின் முக்கியத்துவம் வெளிப்படுவதையும் குறிப்பிட்டார்.

'நாட்டுக்குச் சுதந்திரம் வந்ததே தவிர ராஜ்ய சர்க்கார் இத்தொழிலில் அக்கறை கொள்ளாமல் வரி வசூலிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அதிக வரிகள், அரைகுறை விமர்சனம், பகிஷ்காரம் போன்ற நடவடிக்கைகளால் இத்தொழில் நசுக்கப்படும் போது, மத்திய சர்க்கார் சிறந்த படங்களுக்குப் பரிசளிக்க முன்வந்தது தொழிலுக்கு உயிரளிக்கும் ஔஷதமாக அமைந்தது' என்று குறிப்பிட்டார் வாஸன். பொது மொழியாக ஹிந்தியைப் பரப்புவதில் ஹிந்திப் படங்கள் ஒரு பலமான சாதனமாக அமைந்துள்ளதென்றும் இத்தொழில் மேன்மேலும் வளம் பெற்று தேசத்தைப் பலப்படுத்த வெணடும் என்றும் கூறினார்

இவைதவிர, கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவில் ஸ்ரீராமுலு நாயுடு தயாரித்து டைரக்ட் செய்த மலைக்கள்ளன் தமிழ்ப்படமும் வாஹினியின் பெத்த மனுஷுலு (கே. வி. ரெட்டி டைரக்ட் செய்தது) என்ற தெலுங்குப் படமும் மத்திய சர்க்காரின் நற்சாட்சிப் பத்திரங்களைப் பெற்றன.

'பேசும் படம்' டைரி

குறிப்புகள் :

த-தமிழ்
தெ-தெலுங்கு
ம-மலையாளம்
க-கன்னடம்
ஹி-ஹிந்தி
சி-சிங்களம்

எங்கெங்கே என்னென்ன படங்கள் தயாராகின்றன என்பதை இந்த டைரி காட்டும். முழு விவரங்கள் தெரியாத இடங்களில் கேள்விக் குறி காணப்படும்.

படப் பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
ஜெமினி				
கட்டபொம்மன் (ஜெமினி)	[த]	கொத்தமங்கலம் சுப்பு	?	ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.
நீலவேணி ,,	[த]	,,	?	,,
சதி பகுளா (ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி)	[த]	கே. பி. நாகபூஷணம்	நாகய்யா, எஸ். வரலக்ஷ்மி, கண்ணாம்பா, லக்ஷ்மிபிரபா முதலியோர்.	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
தேவதா (நாராயணன் கம்பெனி)	[ஹி]	ஸாரதி	ஜெமினி கணேசன், அஞ்சலி தேவி, இந்திரா, கிருஷ்ண குமாரி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

ஏவி. எம்.

பூம்புகார் (ஏவி. எம்.)	[த]	கிருஷ்ணன்-பஞ்சு	சிவாஜி கணேசன் முதலியோர்.	அறிவிக்கப்பட்டிருக்கிறது.
புரொடக்ஷன்-1 (எஸ். கே. பிக்சர்ஸ் & ஏவி. எம்.)	[த]	,,	எஸ். வி. சஹஸ்ரநாமம், எஸ். எஸ். ராஜேந்திரன், முஸ்தபா, நடராஜன், பண்டரிபாய், மைனாவதி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.
பாய் பாய் (ஏவி. எம்.)	[ஹி]	எம். வி. ராமன்	அசோக்குமார், கிஷோர்குமார், டேவிட், நிம்மி, நிருபா ராய் முதலியோர்.	பிப்ரவரி வெளியீடு.
சோரி சோரி (ஏவி. எம். கூட்டு)	[ஹி]	ஆனந்த் தாகூர்	ராஜ்கபூர், நர்கீஸ், பகவான், கோப், ஜானி வாக்கர், டேவிட், பிரான், ராஜசுலோசனா முதலியோர்.	,,
நாகுல சவிதி (ஏவி. எம்.)	[தெ]	ஸியெச். நாராயணமூர்த்தி	நாகேந்திரராவ், ரகுராமய்யா, மோகன், 'சௌகார்' ஜானகி, ஜமுனா, கே. மாலதி முதலியோர்.	இம்மாதம் வெளியிடப்படும்
சதாரமா (சங்கர் பிலிம்ஸ்)	[தெ]	எச். சீதாராம சாஸ்திரி	நாகேஸ்வரராவ், ரேலங்கி, கௌசிக், நரசிம்ம ராஜு, 'சௌகார்' ஜானகி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.
சதாரமே (சங்கர் பிலிம்ஸ்)	[க]	எச். சீதாராம சாஸ்திரி	குப்பி வீரண்ணா, நரசிம்ம ராஜு, நாகேஸ்வரராவ், 'சௌகார்' ஜானகி, லக்ஷ்மி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.
டாக்டர் (ஏவி.எம் - சினிமாஸ் லிமிடெட்)	[சி]	கே. சங்கர்	எட்டி ஜெயமனே, ருக்மிணி தேவி, பகவான் முதலியோர்.	ஜனவரி வெளியீடு.

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி

வாஹினி

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
மாயாபஜார் (சசிரேகா பரிணயம்) (விஜயா)	[த, தெ]	கே. வி. ரெட்டி	ஜெமினி கணேசன், ரங்கராவ் முதலியோர்.	ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.
தானே ராஜா (கல்பனு)	[த]	இ. அப்பாராவ் & நாராயணன்	சிவாஜி கணேசன், சஹஸ்ரநாமம், பாலய்யா, எஸ். வி. சுப்பய்யா, ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம் முதலியோர்.	முடிவடையும் தருவாயிலிருக்கிறது.
படித்த முட்டாள் (எனெஸ்கே பிலிம்ஸ்)	[த]	என். எஸ். கிருஷ்ணன்	?	பூஜை போடப்பட்டிருக்கிறது.
பாக்யவதி (ரவி புரொடக்ஷன்ஸ்)	[த]	பிரசாத்	சிவாஜி கணேசன், தங்கவேலு, பத்மினி, ராகினி, எம். என். ராஜம் முதலியோர்.	பாடல்கள் பதிவாக்கப்பட்டு வருகின்றன.
சக்ரவர்த்தி திருமகள் (உமா பிக்சர்ஸ்)	[த]	ப. நீலகண்டன்	எம். ஜி. ராமச்சந்திரன், வீரப்பா, அஞ்சலிதேவி, எஸ். வரலக்ஷ்மி முதலியோர்.	தொடர்ந்து நடைபெறுகிறது.
மதுரைவீரன் (கிருஷ்ணு பிக்சர்ஸ்)	[த]	டி. யோகானந்த்	எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, ஈ. வி. சரோஜா, கிருஷ்ணன்-மதுரம் முதலியோர்.	துரித முன்னேற்றம்.
சரணதாசி (லலிதா பிலிம்ஸ்)	[த, தெ]	டி. பிரகாஷ்ராவ்	நாகேஸ்வரராவ், ஜெமினி கணேசன், ரங்காராவ், என். டி. ராமராவ், அஞ்சலிதேவி, சாவித்திரி, முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

லவ-குச (விஜயா புரொடக்ஷன்ஸ்	[த, தெ]	பி. என். ரெட்டி	?	அறிவிக்கப்பட்டிருக்கிறது.
புரொடக்ஷன்-1 (கதீஜா)	[ம]	தோட்டான்	அல்நஸீர், அம்பிகா முதலியோர்.	பாதி வளர்ந்திருக்கிறது.
அமரதீபம் (வீனஸ் பிக்சர்ஸ்)	[த]	டி. பிரகாஷ்ராவ்	சிவாஜி கணேசன், என். டி. ராமராவ், தங்கவேலு, பத்மினி, சாவித்திரி முதலியோர்.	படப்பிடிப்பு ஆரம்பமாகி விட்டது.
லலிதாங்கி (டி. என். ஆர். புரொடக்ஷன்ஸ்)	[த]	ஸியெச். நாராயண மூர்த்தி	எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, தங்கவேலு முதலியோர்.	படப்பிடிப்பு விரைவில் ஆரபமாகும்.
கண்ணின் மணிகள் (மகேஸ்வரி)	[த]	டி. ஜானகிராம்	எம். கே. ராதா, சுந்தர், ஏ. கருணாநிதி, பத்மினி, ராஜம்மா, முத்துலக்ஷ்மி முதலியோர்.	பிப்ரவரி வெளியீடு.
புரொடக்ஷன்-1 (லக்ஷ்மி புரொடக்ஷன்ஸ்)	[தெ]	பிரசாத்	கிருஷ்ணகுமாரி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெறுகிறது.
பொய்யா மொழி (நேஷனல் பிக்சர்ஸ்)	[த]	ஏ. சுப்பாராவ்	நரசிம்ம பாரதி, டி. எஸ். துரைராஜ், ஸ்ரீரஞ்சனி முதலியோர்.	சில காட்சிகள் சுடப்பட்டிருக்கின்றன.
நல்ல நாள் (லக்ஷ்மி புரொடக்ஷன்ஸ்)	[த]	ஏ. பாஸ்கர்ராஜ்	ராஜசுலோசனா, ஜெமினி கணேசன் முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.
தின்கிரி மேனிகே (எச். டி. பில்ம்ஸ்)	[சி]	ஏ. எஸ். ஏ. சாமி	சிங்கள நடிகர்கள்.	,,
ராரிச்சண்ட பௌர (சந்திரதாரா)	[ம]	பாஸ்கர்	மலையாள நடிகர்கள்.	ஜனவரி வெளியீடு.

படப் பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
பத்தினித் தெய்வம் (வி. ஆர். வி.)	[த]	ஸி.யெச். நாராயண மூர்த்தி	எஸ். வி. ரங்கராவ், முஸ்தபா, வீரப்பா, கண்ணாம்பா முதலியோர்.	படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது.
மங்கள கௌரி (மாஹீ புரொடக்ஷன்ஸ்)	[தெ]	யோகானந்த்	என். டி. ராமராவ், ரங்கராவ் முதலியோர்.	அவ்வப்போது சுடப்படுகிறது.
புரொடக்ஷன்-1 (ராஜ்ஸ்ரீ புரொடக்ஷன்ஸ)	[தெ]	டி. பிரகாஷ்ராவ்	என். டி. ராமராவ், ஆர். நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி, 'சௌகார்' ஜானகி முதலியோர்.	துரித முன்னேற்றம்.
பஞ்சரத்ன (லலித கலா பிலிம்ஸ்)	[க]	கே. ஸி. கிருஷ்ண மூர்த்தி	ஹொன்னப்ப பாகவதர் முதலியோர்.	தொடர்ந்து நடைபெறுகிறது.
புதுமைப் பித்தன் (சிவகாமி)	[த]	ராமண்ணா	எம். ஜி. ராமச்சந்திரன், பி. எஸ். சரோஜா முதலியோர்.	சென்ற மாதம் ஆரம்பமாகியது.
ஆசை (நடேஷ் ஆர்ட்)	[த]	எம். நடேசன்	ஜெமினி கணேசன், வீரப்பா, பத்மினி, ராஜசுலோசனா, கிருஷ்ணன்-மதுரம்.	பாதிக்கு மேல் பூர்த்தியாகி விட்டது.
மூதிதாடே பாக்ய (விட்டல் புரொடக்ஷன்ஸ்)	(க)	ஏ. பி. ஆச்சாரியார்	மைனாவதி முதலியோர்.	தொடர்ந்து நடைபெறுகிறது.
ரம்பையின் காதல் (கல்பனா)	[த]	அப்பாராவ் & நாராயணன்	சந்திரபாபு, துரைராஜ், சஹஸ்ரநாமம், அஞ்சலிதேவி, எம். என். ராஜம் முதலியோர்,	பூஜை போடப்பட்டிருக்கிறது.
பாக்யரேகா (பொன்னுலூரி சகோதரர்கள்)	[தெ]	பி. என். ரெட்டி	கிருஷ்ணகுமாரி, ராமாராவ் முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

ஹரிபக்தா (விஸ்வ கலா சித்ரா)	[க]	டி. வி. சிங் தாகூர்	பண்டரிபாய், மைனுவதி முதலியோர்.	தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
பாக்ய சக்ரா (சித்ர பாரத்)	[க]	ஒய். வி. ராவ்	சௌகார் ஜானகி, வித்யாவதி, கல்யாண்குமார் முதலியோர்.	தொடர்ந்து சுடப்பட்டு வருகிறது.
காத்தவராயன் கதை (ஆர். ஆர். பிக்சர்ஸ்)	[த, தெ]	ராமண்ணா	?	சென்ற மாதம் ஆரம்பமாகியது.
யார் பையன்? (விஜயா பிலிம்ஸ்)	[த]	டி. ஆர். ரகுநாத்	ஜெமினி கணேசன் முதலியோர்.	சென்ற மாதம் பூஜை போடப்பட்டது.
அண்ணா தம்முடு (விஜயா பிலிம்ஸ்)	[தெ]	ஸி. ஸ்ரீநிவாஸராவ்	என். டி. ராமராவ், ஜமுனா, ராஜசுலோசனா முதலியோர்	படப்பிடிப்பு நடைபெறுகிறது.
மர்மவீரன் (ஜுபிலி)	[த]	ரெஹ்மான்	நாகய்யா, ஸ்ரீராம், தங்கவேலு, வைஜயந்திமாலா, ஜி. வரலக்ஷ்மி முதலியோர்.	மும்முரமாகச் சுடப்பட்டு வருகிறது.
ராஜநர்த்தகி (சாமுண்டேஸ்வரி)	[த]	ஸியெச். நாராயண மூர்த்தி	சிவாஜி கணேசன், வைஜயந்திமாலா முதலியோர்.	அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ராயல் (ஸ்டார் கம்பைன்ஸ்)

தேவசுந்தரி (சொஸைடி பிக்சர்ஸ்)	[த]	ஆர். பிரகாஷ்ராவ்	?	ஜனவரியில் ஆரம்பம்.
,, ,,	[தெ]	?	?	,,
,, ,,	[ம]	?	?	,,
,, ,,	[க]	?	?	,,
,, ,,	[சி]	?	?	,,

ரேவதி

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
பெண்ணின் பெருமை (ராகினி)	[த]	வி. புல்லையா	சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், வி. நாகய்யா, சாவித்திரி, சாந்தகுமாரி முதலியோர்.	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
தெனாலிராமன் (விக்ரம்)	[த]	பி. எஸ். ரங்கா	சிவாஜி கணேசன், நாகய்யா, பானுமதி, ஜமுனா முதலியோர்.	ஜனவரி ரிலீஸ்.
,, ,,	[தெ]	,,	நாகேஸ்வரராவ், என். டி. ராமராவ், பானுமதி, ஜமுனா முதலியோர்.	,,
சாரங்கதாரா (மினர்வா)	[த, தெ]	வி. எஸ். ராகவன்	சிவாஜி கணேசன், நம்பியார், சாரங்கபாணி, ரங்கராவ், பானுமதி, ராஜசுலோசனா முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெறுகிறது.
பாலசந்யாசம்ம கதா (ஜோயா & ரேவதி)	[தெ]	பென்துர்த்தி சுப்பாராவ்	ஜக்கய்யா. ரேலங்கி, ஜி. வரலக்ஷ்மி, கிரிஜா முதலியோர்.	துரித முன்னேற்றம்.
சதாரம் (கஸ்தூரி)	[த]	வி. ஸி. சுப்பராமன்	ஜெமினி கணேசன், கே. ஆர் ராமசாமி, பாலய்யா, பானுமதி, முதலியோர்.	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
ஹரிச்சந்திரா (ராஜ்யம் பிக்சர்ஸ்)	[தெ]	ஜம்பனா	ராமாராவ், ரேலங்கி, லக்ஷ்மிராஜ்யம், ரங்கராவ் முதலியோர்.	நடைபெறுகிறது.
தேவதா (நாராயணன் கம்பெனி)	[ஹி]	?	ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி முதலியோர்.	(வாஹினியிலும் இப்படம் சுடப்படுகிறது)

சமயசஞ்சீவி (ரேவதி)	[த]	வி. எஸ். ராகவன்	வித்யாவதி, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர்.	ஆக்கவேலைகள் நடைபெற்று வருகின்றன.
அம்பிகாபதி (ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்)	[த]	ப. நீலகண்டன்	சிவாஜி கணேசன், எம். கே. ராதா. தங்கவேலு, பானுமதி, கண்ணாம்பா, சுலோசனா, ராஜம் முதலியோர்.	பூஜை சென்ற மாதம் போடப்பட்டது.

பரணி

ரத்னமாலா (பரணி)	[த]	ராமகிருஷ்ணா	பானுமதி முதலியோர்.	ஆக்கவேலைகள் நடைபெற்று வருகின்றன.
சிந்தாமணி (பரணி)	[தெ]	,,	பானுமதி, நாகேஸ்வரராவ்.	பாதிக்கு மேல் பூர்த்தியாகி விட்டது.
மணமகள் தேவை (பரணி)	[த. தெ]	,,	பானுமதி முதலியோர்.	விரைவில் ஆரம்பமாகும்.
எங்கோன் ராதா (மேகலா)	[த]	ஏ. காசிலிங்கம்	சிவாஜி கணேசன், பானுமதி, எம். என். ராஜம் முதலியோர்.	தொடர்ந்து நடைபெறுகிறது.

சியாமளா

படித்தபெண் (சியாமளா & நளினி)	[த]	எம். திருவேங்கடம்	கண்ணப்பா. நம்பியார், ராஜசுலோசனா முதலியோர்.	,,
சந்திப்பு (எம். ஆர். எஸ். பிக்சர்ஸ்)	[த]	கே. ஆர். சுந்தரேசன்	எம். கே. ராதா, மனோஹர், நம்பியார், பி. எஸ். சரோஜா, ஜமுனா, முதலியோர்.	பாதிக்கு மேல் பூர்த்தியாகி விட்டது.

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
தர்தி (ஓம்-சக்தி பிலிம்ஸ்)	[த]	கே. ஆர். சுந்தரேசன்	கே. ஆர். ராமசாமி, எஸ். வி. சுப்பய்யா, பி. எஸ். சரோஜா, லலிதா முதலியோர்.	சில காட்சிகள் சுடப்பட்டிருக்கின்றன.
புரொடக்ஷன்-5 (சியாமளா)	[த]	ஒய். வி. ராவ்	எம். ஜி. ராமச்சந்திரன், பாலய்யா சாவித்திரி முதலியோர்.	ஆரம்பமாகியிருக்கிறது.

பிலிம்செண்டர்

தன்னம்பிக்கை (பிலீம் செண்டர்)	[த]	கே. வேம்பு	கண்ணப்பா, பாலய்யா, பண்டரி பாய், மைனவதி, கிருஷ்ணன்-மதுரம் முதலியோர்.	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
என் விதி (தார் ஆர்ட் பிலிம்ஸ்)	[த]	ஜகன்னுத் தார்	எஸ். எம். குமரேசன், வி. எம். ஏழுமலை, ராஜசுலோசனா, விமலா, கிருஷ்ணகுமாரி முதலியோர்.	சில காட்சிகள் சுடப்பட்டிருக்கின்றன.
தெய்வ விபசயா (பி. ஏ. டபிள்யூ. புரொடக்ஷன்ஸ்)	[சி]	ஜே. சின்ஹா	?	ஆரம்பமாகியிருக்கிறது.

ரோஹிணி

ஸ்ரீ ரேணுகா (ரோஹிணி)	[க]	ஒய். ஆர். ஸ்வாமி	ஆர். நாகேந்திரராவ், பண்டரி பாய், முதலியோர்.	நடைபெறுகிறது.
அமிர்த ஹஸ்தம் (ரோஹிணி)	[க. தெ]	?	?	அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நளதமயந்தி (கெம்பராஜ்)	[தெ. த]	கெம்பராஜ்	கெம்பராஜ், பானுமதி முதலியோர்.	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.

பிரகாஷ்

மேலு கொலுபு (ஆனந்தா)	[தெ]	பிரகாஷ்ராவ்	ஸ்ரீராம், ஜி. வரலக்ஷ்மி முதலியோர்.	அவ்வப்போது நடைபெறுகிறது.
மறுமலர்ச்சி	[த]	,,	,,	,,
புரொடக்ஷன்-1 (கஜலக்ஷ்மி பிக்சர்ஸ்)	[த]	எம். திருவேங்கடம்	மனோஹர், பாலய்யா, ராஜசுலோசனா, எம். என். ராஜம் முதலியோர்	சென்ற மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

நியூடோன்

செந்தாமரை (மதரூஸ் பிக்சர்ஸ்)	[த]	பீம்சிங்	சிவாஜி கணேசன், பத்மினி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெறுகிறது.
ராஜா ராணி (நேஷனல் புரொடக்ஷன்ஸ்)	[த]	,,	சிவாஜி கணேசன், பத்மினி, ராஜசுலோசனா முதலியோர்.	முடிவடைந்து விட்டது.
புதுவாழ்வு (சர்வோதயா பிக்சர்ஸ்)	[த]	எம். கே. டி. பாகவதர்	பாகவதர், பாலய்யா, மாதுரி தேவி, கிருஷ்ணன், மதுரம் முதலியோர்.	பாதிக்குமேல் வளர்ந்திருக்கிறது.
குடும்ப விளக்கு	[த]	எப். நாகூர்	நரசிம்மபாரதி, ராஜம்மா, கிருஷ்ணன், மதுரம் முதலியோர்.	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
தெருப் பாடகன் (சுகுமார் புரொடக்ஷன்ஸ்	[த]	?	மகாலிங்கம், மனோஹர், பாலய்யா, கிரிஜா, மாலதி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெறுகிறது.

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
வாழ்விலே ஒருநாள் (மெர்க்குரி)	[த]	காசிலிங்கம்	சிவாஜி கணேசன், ஸ்ரீராம், ஜி. வரலக்ஷ்மி, ராஜசுலோசனு முதலியோர்.	முடிவடையும் தருவாயி லிருக்கிறது.
புரொடக்ஷன்-1 (அம்ப்ரோஸ் ஆர்ட் பிலிம்ஸ்)	[சி]	பி. என். ராவ்	சரளா, விமலா முதலியோர்.	அவ்வப்போது சுடப்படு கிறது.
சிட்டடெல்				
? (சிட்டடெல்)	[த]	ஜோஸப் தளியத்	ஜெமினி கணேசன், பாலய்யா, தங்கவேலு, பத்மினி முதலி யோர்.	படப்பிடிப்பு நடைபெறு கிறது.
பாயல் (மெட்ராஸ் டாக்கீஸ்)	[ஹி]	,,	சுனில்தத், டேவிட், பத்மினி முதலியோர்.	,,
மூன்று பெண்கள் (ஜே. எஸ். எல்.)	[த]	ஆர். பிரகாஷ்	மனோஹர், பி. கே. சரஸ்வதி பாலய்யா, எம். என். ராஜம் முதலியோர்.	பாதிக்கு மேல் பூர்த்தியாகி விட்டது
நெப்டியூன்				
நயா ஆத்மி (ஜுபிடர்)	[ஹி]	தீக்ஷித்	என். டி. ராமராவ் அன்வர், கோப், அஞ்சலிதேவி, ராஜ சுலோசனு, ஜமுனு முதலியோர்	பிப்ரவரி ரிலீஸ்
சந்தோஷம் ,,	[தெ]	,,	என். டி. ராமராவ், ரேலங்கி, அஞ்சலிதேவி, ஜமுனு, ராஜ சுலோசனு முதலியோர்.	,,

நல்ல தங்காள் (ஜுபிடர்)	[தெ]	பி. புல்லய்யா	நாகய்யா, ரேலங்கி, கண்ணாம்பா, ஸ்ரீரஞ்சனி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெறுகிறது.
வெறும் பேச்சல்ல (பிரின்ஸிபல் பிக்சர்ஸ்)	[த]	ஜோசப் பள்ளிபாட்	பாலய்யா, பத்மினி, எஸ். வரலக்ஷ்மி முதலியோர்.	படப்பிடிப்பு அவ்வப்போது நடைபெறுகிறது.
கன்னியின் சபதம் (ஜுபிடர்-ஏ. எல். எஸ்.)	[த]	எஸ். பாலசந்தர்	கே. ஆர். ராமசாமி, மாதுரிதேவி, ராஜசுலோசனா முதலியோர்.	சென்ற மாதம் ஆரம்பமாகியது.
? (ஜுபிடர்)	[த]	கே. ராம்நாத்	சிவாஜி கணேசன், நம்பியார், லலிதா, பத்மினி, ராஜசுலோசனா, கிருஷ்ணன்-மதுரம் முதலியோர்.	திட்டம் வகுக்கப்படுகிறது.
? (ஜுபிடர்)	[த]	ப. நீலகண்டன்	சாவித்திரி முதலியோர்.	படப்பிடிப்பு ஆரம்பமாகியிருக்கிறது
புதையல் (கமால் பிரதர்ஸ்)	[த]	கிருஷ்ணன்-பஞ்சு	எம். கே. ராதா, பத்மினி முதலியோர்.	படப்பிடிப்பு நடைபெறுகிறது.
ஜீவித சதன (சாந்திகலா நிகேதன்)	[சி]	சாந்திகுமார்	சாந்திகுமார், சீதா ஜெயவர்த்தனே, அயிஷா வீரக்கூன் முதலியோர்.	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.

நரசு

புரொடக்ஷன்-3 (நரசு)	[த]	வேதாந்தம் ராகவய்யா	ஜெமினி கணேசன், கே. சாரங்கபாணி, சாவித்திரி, கிரிஜா முதலியோர்.	தொடர்ந்து நடைபெறுகிறது.
,, (நரசு)	[தெ]	,,	நாகேஸ்வரராவ், ரேலங்கி, சாவித்திரி முதலியோர்.	,,
சிதாரென்-ஸி-ஆஜ் (நரசு)	[ஹி]	கியான் முகர்ஜி	அசோக்குமார், வைஜயந்திமாலா, முதலியோர்	இம்மாதம் ஆரம்பமாகும்.

89684

சீனாவில் இந்தியத் திரைப்பட விழா

சீனாவில் இந்திய திரைப்பட விழாவுக்கு பிரமாத வெற்றி என்றே கூறவேண்டும். நாங்கள் திரைப்பட விழா ஆரம்பமாவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னதாக வந்துவிட்ட போதிலும், கான்டன் நகரில் வழி எல்லாம் பெரிய விளம்பரப் பலகைகளில் இந்தியப் படங்கள் பற்றிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததைப் பார்த்தோம். சீன பாஷையில் பெரிய பெரிய எழுத்துக்களில் அவைகளின் தலைப்புக்கள் எழுதப்பட்டிருந்தன. எங்கள் ஹோட்டலுக்கு எதிரே நதி ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த பெரிய விளம்பரமும் பெரும் திரளான மக்களை ஆகர்ஷித்துவிட்டது. இவை தவிர மற்றொரு முறையிலும் நம் படங்களுக்கு முன்கூட்டியே விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. சீனாவிலே மிகப் பிராபல்யமான சினிமா பத்திரிகையான "மாஸ் பிலிம்" இந்தியத் திரைப்பட விழா விசேஷ மலர் ஒன்றை வெளியிட்டு அதில் விழாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று இந்தியப் படங்கள் சம்பந்தப்பட்ட பிமல்ராய், நர்கீஸ் முதலியவர்கள் எழுதிய விசேஷக் கட்டுரைகளைப் பிரசுரித்திருந்தது. இந்தியப் படங்களையும் படத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களையும் அறிமுகம் செய்து விரிவான கட்டுரைகளும் புகைப்படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. சர்வகலாசாலைகள், தொழிற்சாலைகள் முதலியவைகளின் விளம்பரப் பலகைகளில் இப்படங்களில் வரும் காட்சிகளைக் காட்டும் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அந்த இடங்களுக்கு நாங்கள் விஜயம் செய்தபோது திரளாகக் கூடியிருந்த ஜனங்கள் எங்களுடன் வந்திருந்த நடிக, நடிகையர்களை அடையாளம் கண்டுபிடிக்க முயன்றனர். பால்ராஜ் சுலபமாகக் கண்டுபிடிக்கப்பட்டு விட்டார். "ரிக்ஷாக்கார சம்பூ" (தோ பீகா ஜமீனில் ரிக்ஷாக்காரனாக பால்ராஜ் நடித்திருக்கிறார்) என்று குதூகலத்தோடு கூச்சல் போட்டுக் கொண்டு அவரை அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். பிமல்ராய், சேதன் ஆனந்த், பிருதிவிராஜ்கபூர் ஆகியோர் அறிமுகம் செய்யப்பட்டபோது அவர்களை வெகு சந்தோஷத்தோடு கை குலுக்கினர்.

பீகிங் நகரில் திரைப்பட விழா ஆரம்ப வைபவம் ஒரு பெரிய நிகழ்ச்சியாக இருந்தது. "தோ பீகா ஜமீன்" என்ற படம்தான் பிரதான படமாகக் காட்டப்பட்டது. அத்துடன், இந்திய சர்க்கார் திரைப்படப் பகுதியின் "இந்திய குகைக் கோயில்கள்" "சுபிட்சத்துக்கான திட்டங்கள்" ஆகிய இரண்டு படங்களும் காட்டப்பட்டன. பீகிங் நகரிலுள்ள மிகப் பெரிய தியேட்டரில் அவை காட்டப்பட்டன. காட்சிக்கு சீன உப-பிரதமர், கலாசார (ஆக்டிங்) மந்திரி, கலாசார இலாகாவின் திரைப்படப் பிரிவு டைரக்டர், தலைநகரிலுள்ள ஸ்தானிகப் பிரதிநிதிகள், இந்திய ஸ்தானிகராலய கோஷ்டி உள்பட உற்சாகமிக்க சீனப்பார்வையாளர்கள் ஆகியோர் வந்திருந்தனர்.

சீன கலாசார மந்திரி விழாவை ஆரம்பித்து உரை நிகழ்த்தினார். இந்திய கோஷ்டி சார்பில் பிருதிவிராஜ்கபூர் நன்றி தெரிவித்தார். பிமல்ராய் இந்திய திரைப்படத் துறையின் முந்திய, தற்போதைய போக்குகளை சுருக்கமாகக் கூறினார். இந்திய ஸ்தானிக அதிகாரியும் சுருக்கமாகப் பிரசங்கம் செய்தார்.

பிறகு நாங்கள் படத்தைப் பார்ப்பதற்காகப் பால்கனிக்குப் போனோம்; அப்போதுதான் நம் படங்களுக்கு எவ்வளவு வரவேற்பு கிடைத்திருக்கிறது என்பதையும் சீன பாஷையில் "டப்' செய்வதில் அவர்கள் எவ்வளவு திறமை காட்டியிருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டோம். ஹிந்திப் படத்தை சீன பாஷையில் "டப்" செய்வது சாத்தியமா? எவ்வளவுதூரம் அது வெற்றியடையும், என்று சந்தேகப்பட்டோம். ஆனால் "டப்பிங்" அபார திறமையுடன் செய்யப்பட்டிருந்தது. பால்ராஜும், நிருபாராயும் இயல்பாகவே சீன பாஷையிலேயே பேசுவது போல் தோன்றியது.

சாங்சன் என்னும் இடத்தில் ஏழு நாளில் 83,000 பேர் நம் படத்தைப் பார்த்தனர். அந்த நகரத்தில் ஜனத்தொகையே 4,00,000 பேர் தான். பல நகரங்களிலும் திரைப்பட விழா முடிந்தபின் பல நாள் வரையில் நம் படங்கள் காட்டப்பட்டு வந்தன. சீனாவின் அழகு நகரமான ஹாங்சோவில் நம் படங்களைப்பார்க்க வந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிடலங்காததாயிருந்தபடியால், காலை ஐந்து மணிக்கே காட்சி ஆரம்பித்துவிட்டது. அந்த நகரத்தின் ஜனததொகையில் ஆறில் ஒரு பங்குப் பேர் அந்நகரத்தின் ஐந்து சினிமாக்களிலும் ஏழு நாளும் திரண்டு வந்து காட்சிகளைப் பார்த்தனர்.

இடையிலே ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறேன். நாங்கள் பீகிங் திரும்பி வந்ததும் எங்களில் ஒருவர் சீனாவில் சீனப் படம் பார்க்க விரும்பினார். அருகிலுள்ள அத்தனை தியேட்டருக்கும் போய்ப் பார்த்தார். நடு ராத்திரி ஏமாற்றத்துடன் திரும்பி வந்து, "எல்லா சினிமாக்களும் இந்தியப் படங்களையே திரையிட்டிருந்தன" என்று கூறினார்.

சினிமாப்பட உலகில் ஈடுபட்டுள்ள பலரையும் நேரில் சந்திப்பதற்கு கிடைத்த அரிய வாய்ப்பைத்தான், சீனாவுக்கு நாங்கள் விஜயம் செய்ததில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியும் அக்கறையும் தந்த அம்சமாக நான் கூறுவேன்.

எங்கள் சுற்றுப் பிரயாணத்துக்காக அவர்கள் வெகு நுணுக்கமாகத் திட்டமிட்டு ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். ஹாங்காங்கிலிருந்து பிரிட்டிஷ் எல்லையை கடந்தவுடனேயே எங்களை வரவேற்பதற்கு டைரக்டர் சாங் ஹவ்வி ஷ்யா தயாராய் நின்றார். அவரைக் கண்டதும் எங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்தான் "வெள்ளை முடிப் பெண்மணி" என்ற படத்தை டைரக்ட் செய்தவர். சென்ற வருஷ ஆரம்பத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த சினிமா கோஷ்டியுடன் அவரும் வந்திருந்தார். அமைதியும் அடக்கமும் நுண்ணறிவும் வாய்ந்த ஸ்ரீ சாங் எங்கள் கோஷ்டியிலுள்ள பலரை புது டில்லி பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் சந்தித்திருக்கிறார்.

மற்றொரு பிரபல சீன சினிமா டைரக்டர் ஜான்-ஹ ஸியாங் சங் எங்கள் கோஷ்டியில சேர்ந்து கொண்டார். "சூயி மலைமீது செங்கொடி" என்னும் படத்தை தயாரித்து சர்வதேச சினிமா உலகில் பெயர் பெற்றுள்ளவர் அவர். அப்படத்தை சீன பிரதமர் சௌ-என்-லாய் பாராட்டியிருக்கிறார். எங்கள் கோஷ்டியில் இருந்த மற்றொருவர் பிரபல சினிமா நடிகையான வனப்பு மிக்க சாங் ஜ யூயி பாங்.

பீகிங் நகரில் எங்கள் கோஷ்டியில் ஸ்ரீ யாங் ஸவோ ஜென் என்பவரும் சேர்ந்து கொண்டார். அவர் சீன பிலிம் விநியோக கார்ப்பரேஷன் டெபுடி டைரெக்டர்; அந்த ஸ்தாபனம் தான் சினிமாப்பட இறக்குமதி பற்றி நேரடியாய்க் கவனிக்கிற ஸ்தாபனம். அவரைச் சந்தித்ததன் மூலம் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே சினிமாப் படங்களைப் பரிவர்த்தனை செய்வது சம்பந்தமான நடவடிக்கை

'பேசும் படம்'

17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு
சென்னை-2

சந்தா விகிதம்

ஒரு வருஷம்

உள்நாடு	ரூ.	9	0	0
வெளிநாடு	,,	12	0	0

ஆறுமாதம்

உள்நாடு	,,	4	8	0
வெளிநாடு	,,	6	0	0

வி. பி பி.யில் அனுப்ப இயலாது.
ஆறுமாதத்துக்குக் குறைந்த சந்தா கிடையாது.

குறிப்பு: பேசும் படம் சந்தாதாரர்களுக்குப் பிரதி வருஷமும் ஏப்ரல் மாதத்தில் வெளிவரும் பேசும் படம் ஆண்டு மலரும் அதிகக் கட்டணமின்றியே அனுப்பி வைக்கப்படும்.

முறைகளை நிர்ணயிப்பதற்கு அதிக வசதி கிடைத்தது.

சீனாவின் பெரிய மதில் சுவரை நாங்கள் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விஜயத்தின் பின் எங்களுக்கு பீகிங் நகரத்து பிரபல சிற்றுண்டிச்சாலையாக "பீக்கிங்டன்" போஜன சாலையில் விருந்துச் சாப்பாடு அளிக்கப்பட்டது. அங்கே நாங்கள் சினிமாப் படங்கள் பற்றிய பல்வேறு பிரச்னைகளையும் கலந்து விவாதித்தோம்.

பீகிங் நகரிலும் சாங்கோ ஹான் நகரிலும் சினிமா ஸ்டுடியோக்களுக்கு விஜயம் செய்துவந்தபின் நாங்கள் ஒவ்வொரு தரப்பாரும் தனித்தனியே சந்தித்து படத் தயாரிப்புப் பிரச்னைகள் பற்றி விவாதித்தோம். இந்திய டைரக்டர்களும் சீன டைரக்டர்களும், இருதரப்பு தயாரிப்பாளரும், இருதரப்பு நடிகைகளும், தொழில் நுட்பத் துறையினரும், எழுத்தாளர்களும், பட விமர்சகர்களும் தனித்தனிக் கோஷ்டிகளாகச் சந்தித்தோம்.

இவ்விவாதங்களின் பயனாய் இரு தரப்பினருக்கும் உள்ள பிரச்னைகள் பற்றிப் பரஸ்பரம் தகவல் தெரிவதற்கு வசதி கிடைத்தது. சீனாவில் படத்தயாரிப்பானது திட்ட ரீதியாகவும், சிக்கனமாகவும், சுருங்கிய காலத்திலும் தயாரிக்கப்படுவதை அறிந்து நாங்கள் வெகுவாகப் பாராட்டினோம். எந்தெந்தக் காரியங்களை முதலில் கவனிக்க வேண்டுமென்பதை நன்கு அறிந்து நடவடிக்கை எடுப்பதில் அவர்களுக்குரிய திறமையை நாங்கள் வியந்தோம். சினிமாத் தொழில் சம்பந்தமாய்ப் பயிற்சி அளிப்பதற்காக அவர்கள் ஏற்கனவே ஒரு பயிற்சிக் கழகத்தை (அகாடமி) ஏற்படுத்தியிருக்கிறார்கள். "சீனரியோ" எழுத்தாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு தனி நிலையமும் அதில் இருக்கிறது. சீனாவில் ஒத்திகை நடத்துவதில் விசேஷ கவனம் செலுத்துகிறார்கள்; படப்பிடிப்புக்கு (ஷூட்டிங்) ஒதுக்கப்படுகிற நேரத்தைவிட அதிக நேரம் ஒத்திகைக்கே ஒதுக்கப்படுகிறது. ஏற்கெனவே "கார்டூன் - பொம்மை" படத் தயாரிப்புப் பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவை சிறந்த வர்ணப் படங்களைத் தயாரித்து வருகின்றன.

ஒவ்வொரு ஸ்டுடியோவிலும் அதன் டைரெக்டர் அந்த ஸ்டுடியோவின் வரலாற்றையும் தற்போதைய நடவடிக்கைத் திட்டங்களையும், எதிர்காலத் திட்டங்களையும் விவரித்தார். இங்கு ஒவ்வொரு ஸ்டுடியோவும் வெகு சுத்தமாகவும், நாசூக்காகவும் வைக்கப்பட்டிருந்தன. தொழில் நுட்ப ஊழியர்கள் தங்கள் ஆடைகளில் அழுக்குப் படியாமல் இருப்பதற்காக மறைப்புத் துணி அணிந்திருந்தனர். தொப்பியும் மறைப்புத் துணியும் வெள்ளை நிறத்தில் பளிச்சென்று விளங்கின. சினிமாத் தொழிலின் ஒவ்வொரு பிரிவிலும் பெண்கள் ஏராளமாக ஈடுபட்டிருந்ததைக் காண எங்கள் கோஷ்டியிலிருந்த பெண்களுக்கு அதிக சந்தோஷம் ஏற்பட்டது. டைரக்டர்கள், காமிராக்காரர்கள், "எடிட்டர்கள்", கதை வசனம் - எழுத்தாளர்கள், பட விநியோக சிப்பந்திகள், டப்பிங் நிபுணர்கள், படங்களைத் திரையிடுபவர்கள் முதலிய சகல தரப்பிலும் பல பெண்களை நாங்கள் கண்டோம். இவ்வருஷ தேசீய தின செய்திப் படத்தை வெகு திறமையாகத் தயாரித்த டைரக்டர் ஒரு பெண்மணிதான். அப்படம் பிடிக்கப்பட்ட மறு தினமே அது திரையிடப்பட்டு விட்டது.

ஷாங்காய் ஸ்டுடியோக்களில் "கார்ட்டூன்" படப் பிரிவுகளைப் பார்வையிட்டதில் எங்களுக்கு விசேஷ திருப்தியேற்பட்டது. இந்தியாவில் "கார்ட்டூன்" படத் தயாரிப்பு சீக்கிரத்தில் ஆரம்பமாகவிருப்பதால் எங்கள் அக்கறையும் அதிகமாக இருந்தது.

ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டுக்கு விஜயம் செய்வதன் மூலம், தேசங்களிடையே நல்லுணர்ச்சி வளர்வதற்கு வழி ஏற்படும் என்று உறுதியாகச் சொல்லலாம். இந்த அம்சத்தைப் பொறுத்தமட்டில் எங்கள் சீன விஜயம் நிச்சயமான வெற்றியேயாகும்! வாழ்க இந்தோ-சீன உறவு!

(சீனப் பட விழாவுக்குப் போயிருந்த இந்திய கோஷ்டியிலிருந்த ஒருவர் எழுதிய கட்டுரை)



"பஸுபு குங்கும" என்ற தெலுங்குப் படத்தில்
ஜி. வரலக்ஷ்மி

இந்த ஜோடி போட்டோவுக்குப் 'போஸ்' கொடுப்பது போலில்லையா !—'தெனலிராம'னில் ராமராவ், சந்தியா

விக்ரம் புரொடக்ஷன்ஸ்
தெனாலி
ராமன்
காட்சிகள்

விக்ரம் புரொடக்ஷன்ஸ்
"தெனாலிராமன்"
காமிரா நிபுணர் பி.எஸ்.
ரங்காவின் டைரக்ஷ
னில் தயாராகிறது.
விரைவில் வெளிவரப்
போகிறது இந்த
ஹாஸ்ய தமிழ்ப் படம்,

நாகய்யா, சிவாஜி கணேசன், என். டி. ராமராவ், நம்பியார், பானுமதி, சந்தியா, ஜமுனா, சுரபி பாலசரஸ்வதி முதலிய நடிக நக்ஷத்திரங்கள் இப் படத்தில் நடித்து வருகின்றனர்.



ஹாஸ்யம் நிறைந்த
இந்தக் கதை அறி
வூட்டுவதாகவும்
இருக்கும். கோல்
டன் பில்ம்ஸார்
தமிழ்ப் பதிப்பின்
உரிமையைப் பெற்றி
ருக்கிருர்கள்.

பாரகன் பிக்சர்ஸ்

நான் பெற்ற செல்வம்

காட்சிகள்





89684

பாரகன் பிக்சர்ஸாரின் "நான் பெற்ற செல்வம்" தமிழ்ப் படத்தில் சிவாஜி கணேசன், ஜி. வரலக்ஷ்மி, எம். என். ராஜம், நம்பியார், முத்துலக்ஷ்மி, கருணாநிதி, சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, ஏழுமலை, சாயிராம், ஸி. டி. ராஜகாந்தம், பி. டி. சம்பந்தம் முதலியோர் நடித்திருக்கின்றனர். கே. சோமு இந்தப் படத்தை டைரக்ட் செய்திருக்கிறார்.